REGD 4642 M.

ந்தா விபரம்
—
ஆண்டு ரூ 7,
,, 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்

இரண்டணா

இலங்கை 15 சதம் | மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 26-2-50 | இதழ் 35



ஜெய் இந்த்! சேலம் செல்வோம் வாராய்!

நீதி, கூடாதாம்!

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஒழியவேண்டும், சாதிபாகுபாடுகளை வைத்து திறமையுள்ளோரைக் கீழே தள்ளுவதா, இதுமுறையா, நீதியா, என்று 'ஒருசாரார்' வேண்டுமென்றே அடிக்கடி கூச்சலிட்டு வருகின்றனர்! கல்லூரிகளிலும், தொழிற்கல்லூரிகளிலும், சமநீதி வழங்கப்படவேண்டும் என்ற எண்ணத்துடன், இடங்கள் பகிர்ந்தளிக்கப்படும் முறையை எதிர்த்து, 'இவர்கள்' சமயம்நேர்ந்த போதெல்லாம், சங்கநாதம் செய்து வருகிறார்கள்!

இந்தப் புகார், நேரு வரை எட்டியிருப்பதோடுமட்டுமன்றி, எப்போது பார்த்தாலும் பெரிதாகப் பேசப்படுகிறது, வக்கீல்களால், பெரியதலைவர்களால், பிரசங்கபூஷணங்களால், தன் "சொல்லுக்கு மதிப்புண்டு" என்ற தன்மையைப் பெற்றுவிட்டசாஸ்திரிகளால்!

சமுதாயம், சாதிகளால், சாக்கடையாகிவிட்டது. உயர்ந்த நிலையில் தன்னை வைத்துக்கொண்டவன், பிறரை ஏமாற்றி, தன்நிலைமையை, அறிவியல், அரசியல், பொருளியல், எல்லாத்துறைகளிலும் சிறந்ததாக ஆக்கிக்கொண்டு முன்னேறிக்கொண்டிருக்கிறான்! ஆனால், அவன் கீழே கிடப்பவனோ, தத்தித்தவழ்ந்துமுன்னேற முயன்றாலும் முடிவதில்லை—ஏழ்மையால், சூழ்நிலையால்!

இதைப்போக்கி, முன்னேறியவர்க்கத்தையும்—முன்னேறாத வர்க்கத்தையும் ஓரேஇடத்தில், சமநிலையில் வைக்கவேண்டுமென்பதே வகுப்புவாரிப்பிரதிநிதித்வம். இந்த, நீதி—இன்று காங்கிரஸ் ஆளவந்தாராலும் ஏற்கப்பட்டு, நடைமுறையில் அமல் நடத்தப்படுகிறது!

ஏகபோகச் சுரண்டல் பாதை மூடப்பட்டு எல்லோருக்கும் இடம் உண்டு என்ற நீதிப்பாதையைக் காட்டுவது 'நெஞ்சில் ஈரமில்லாதவர்களாக' இவர்களை, ஆக்கி, அனுதினமும், அலறச்செய்துவருகிறது!

உண்மையில் மக்கள் தொகையில் நூற்றுக்கு ஐவராக இருக்கும் இவர்கள் நிலை, சேவலமாக்கப்பட்டிருக்கிறதா, ஒதுக்கப்பட்டிருக்கிறதா, என்பதைக் காணுங்கள்!

பரந்தமனோபாவமும், விரிந்த சிந்தையும், வளரவேண்டும் என்று எல்லோரும் இதயபூர்வமாகப் பாடுபடும் இக்காலத்தில் 'தனது தர்ப... நீடிக்கவேண்டும் என்ற ஆசையு... "ஐயோ, எல்லாம் போய்விட்ட... என்று கூச்சலிடும் அந்தணர்... இதைச்சிறிது கூர்ந்துபார்க்கட்டு... தீர்ப்புப்பெறட்டும்; சாந்தி அடை... டும் என்று இந்தபுள்ளிவிபரத்தை... தருகிறோம்!

இது கடந்தவாரம் "மெயில்"... சரியில் (Academicus) என்ற பு... பெயருடன் ஒருதோழர் எழுதி... கும் கடிதத்திலிருந்து கிடைத்... தாகும்:—

ஆண்டு 1946 - 47

	கல்லூரி	தொழிற்கல்...
பார்ப்பனர்	11,275	1,499
பார்ப்பனரல்லாதார்	11,487	2,092
கிரிஸ்துவர்	2,513	436
முஸ்லிம்	1,231	291
ஆதித்திராவிடர்	3,67	91
ஐரோப்பியர்	1,16	70
ஆங்கிலோ இந்தியர் & இதரர்	99	21
சதவிகிதம் பார்ப்பனர்		41.8
சதவிகிதம் பார்ப்பனரல்லாதார்		42

இந்தப் புள்ளி விபரங்கள் சர்க்காரது கல்வி இலாக்... டைரக்டருடையதாகும். மொத்த மக்கள் தொகையில் பார்ப்பனர் ச... 5 சத விகிதம்தான் என்பதை வைத்து கணக்கைக் கவனிக்க வேண்டும்...

	செகண்டரி பள்ளிகள்	எலிமெண்... பள்ளிகள்
1. பார்ப்பனர்	86,015	89,476
2. பார்ப்பனரல்லாதார்	202,339	13,01,325
சதவிகிதம்:		
1.	24.8	42
2.	58	64

*

கம்யூனிசமும் "கனம்"களும்

தீவிர சமதர்மவாதி

பெரிய சோஷியலிஸ்டு

முற்போக்கு வீரர்

பாட்டாளிகளின் தலைவர்

ஏழை பங்காளர்

இல்லாதோரின் நண்பர்

இது போன்ற போற்றுரைகள், ன்பும் தரப்பட்டன — இப் தும் கூறப்படுகின்றன, இந்நாட் பிரதமர் நேருவைப் பற்றி ம்போதெல்லாம். பிரதமர் நேரு, னிசத்தைக் கரைத்துக் குடித் , கம்யூனிசம் நடைமுறைகளால் ப்பிடிக்கப் பட்டுவரும் ரஷ்யா குச் சென்றவர், அங்கு கண்ட சிகளைக் கட்டுரைகளாய் நூல் ய் திரட்டித்தந்தவர், அவர் பொதுவுடைமைவாதி—முத ளித்துவத்தின் வைரி றெல்லாம் போற்றிக் கூறப்பட்ட —இன்றும், காங்கிரஸ் கட்சியின லயே கூறப்படுபவர்.

இந்தியக் கம்யூனிஸ்டுகள் பற் பேசும்போதெல்லாம், பன் ற, இதுபோன்று கூறுபவர் ன் உரைகளை வலியுறுத்துவது ல அவரும் பேசியுள்ளார்—"கம் சக்கொள்கைகளை மறுக்கவில்லை, ளுக்குமட்டும் பிடித்தமில்லையா ன? மாஸ்கோ எங்கள் விரோ —மார்க்சீயம் எங்களை வசீகரிக் தா? இல்லையென்று கூறவில் ! எனினும், இந்நாட்டுக்கம் ஸ்டுகளின் போக்குத்தான் எங் குப் பிடிக்கவில்லை. மக்களை மதிக் 'மாஸ்கோவையே' நினைத்துக் க்கின்றனர்—நாட்டு நலனை க்காது நாசவேலைகளில் ஈடுபடு றனர். இதையெப்படிச்சம்மதிக்க யும்? சகித்துக்கொள்ள முடி "—என்று கூறியுள்ளார். பிரத நேருவைப்போலவே, பீடத்திலி ரும் பெரியதலைவர்கள் பலரும், னிஸ்டுகளின்போக்குக்குறித்து டனவீச்சுகளை வீசும் பொழுது, இந்தக் கருத்தையே வெளியிட்டு வருகின்றனர்.

கம்யூனிசத்தை நாங்கள் எதிர்க்கவில்லை; ஆனால் கம்யூனிஸ்டுகள், அதுவும் இந்தியக் கம்யூனிஸ்டுகள் போக்குப் பிடிக்கவில்லை — பொல்லாங்கு செய்கின்றனர். இதுதான், இந்தியக் கம்யூனிஸ்டுகள் பற்றி காங்கிரஸ் தலைவர்கள் தரும் தீர்ப்பு.

* * *

ஏழைபணக்காரன் என்ற பேதமும், வாழ்பவன் வாழமுடியாதவன் என்ற வேதனையும், இருப்பவன் இல்லாதவன் என்ற கொடுமையும் ஒழிக்கப்பட்டு, 'எல்லோரும் ஓர்நிலை' யாகி, நாடு பொதுவாக ஆகி, மக்கள் மன்றம் மகிழ்ச்சிக்கடலாக ஆக வேண்டுமென்ற நற்கொள்கைகள் நிறைந்தது, கம்யூனிசப்பாதை.

ஆனல், கம்யூனிசப் பாதையில் இங்கு நடந்து செல்வோரின், வழி தவறியிருக்கிறது; விழி, வெறிப் பாதையில் திரும்பி விட்டது; பலாத்காரமும் நாசமும் பரவச்செய்வதையே பணியெனக்கொண்டு விட்டனர்—என்ற குற்றச்சாட்டுக் கூறப்படுகிறது.

சமுதாய நல்வாழ்வைக் கருதிப் பாடுபடவேண்டியவர்களின் பார்வை படுமோசமான வழிகளில் சென்று விட்டது. அட்டகாசமும், அல்லல் தரும் செயல்களும் நிறைந்து விட்டன, அவர்கள் உள்ளங்களில்—

(அடுத்த பக்கத்தில்)

கோட்டைக்குள்ளே 'குத்து வெட்டு!'

"ஜீவா, ஏ. எஸ். கே அய்யங்கார், கே. டி. ராஜு, ஜே. பி. புருஷோத்தம் கோஷ்டியினர் தொழிலாளி வர்க்கப் போராட்ட அணியைவிட்டோடி விட்டனர்"

"இவர்கள் தமிழ்நாட்டுத் தொழிலாளர் வர்க்கத்தின் புதிய துரோகிகள்"

"இவர்களையும், இவர்களோடு சேர்ந்தவர்களையும் வர்க்க விரோதிகளாக மதித்து, அவர்களுடைய நடவடிக்கைக்குமுடிவுகட்டித்தொழிலாள வர்க்கப் போராட்டத்தைக் காப்பாற்றுவோம்"

"தென்னிந்திய இரயில்வேத் தொழிற்சங்க இயக்கத்திற்குள் புகுந்துகொண்டு, செல்வாக்கைத் தேடிக்கொண்ட சுயநலமிகள்"

"முதலாளித்துவத்தின் கைக்கூலிகளுக்கும், ஸ்ட்ரைக் உடைக்கும் கருங்காலிகளுக்கும், இந்தத் துரோகக் கும்பலுக்கும் வித்தியாசமில்லை."

"கே. டி. ராஜு, ஜீவானந்தம் கோஷ்டி காங்கிரஸ் முதலாளித்துவத்தின் கருங்காலிப்படை"

"இந்தக் கும்பல் தங்கள் சுய செல்வாக்கிற்காக தொழிலாளி வர்க்கத்தை ஏணியாக உபயோகித்தவர்கள்"

"இவர்கள் லெனின் — ஸ்டாலின் பெயரை உச்சரித்ததும் 'செங்கொடிக்கு ஜே!' என்றதும் தொழிலாளி வர்க்கத்தை வஞ்சித்து, தங்கள் சுயநலத்தைப் பாதுகாக்க!"

* * *

கடுஞ்சொற்கள்—கொடுமைசுட்டிகள் வீசப்பட்டிருக்கின்றனவே, கம்யூனிஸ்டுத் தலைவர்களாகிய ப ஜீவானந்தம் போன்றோர் மீது! யாருடைய வேலை—எவர் பேசியது—காங்கிரஸ் மாநாட்டில்தானே, வேற்றுக் கட்சியினர் கூட்டத்திலா—என்று கேட்கத் தோன்றும். அவ்வளவு வேக

(13-ம் பக்கம் பார்க்க)

(முன் பக்கத் தொடர்ச்சி)

இது, இந்தியக் கம்யூனிஸ்டுகள் பற்றிப்பலர் தரும் கருத்து.

கட்சிக்கொள்கைகள், நாட்டு வாழ்வை நல்ல மலர்ச்சோலையாக ஆக்கும்நிலையிலிருந்தாலும் — அவை களைக்கடைப்பிடிப்போர், கால்தவறி, கண்திசை மாறி, வேற்று வழிகளில் தங்கள் இலட்சியங்களைச் சாதிக்க நினைத்தார்களேயானால், அதுவெற்றி தராது; விழலுக்கிறைத்த நீராகவே ஆகும் அந்த உழைப்பு!

நீரற்றுக் காய்ந்துகொண்டிருக்கும் மலர்ச்சோலையை, மணம் கமழ்வதாகப் புதுப்பிக்கப் போகிறேன் என்று கூறிக்கொண்டு, மரத்தின் கிளைகளையும், தழைகளையும் வெட்டிக் குவித்தால்—விளைவு பயன்தர முடியாது.

நாற்றம் எடுத்த கிணற்றை நல்லதாக்கப் போவதாகக் கூறிக்கொண்டு நீரை இறைத்து சேற்றை வழித்து சீர்திருத்திச் செப்பனிடுவதற்குப் பதில், மண்ணைவெட்டி மூடிக், கற்களை இடித்து, மூட முயன்றால்— இது என்னப்பா வேதனை, என்றே எவரும் கூறுவர்.

நாட்டு வாழ்வை நல்லதாக்கப் போகிறேன் என்று கூறிக்கொண்டு, மக்கள் மன்றத்தில் மகிழ்ச்சி நிலவச் செய்வதே எங்கள் ஆசை என்று பேசிக்கொண்டு, பீதியையும் குழப்பத்தையும் விளைவித்தால்—எவரும், இதை நற்பணியென்று கூறார்.

இந்தியக்கம்யூனிஸ்டுகள் 'எங்கள் இலட்சியம் மக்கள் வாழ்வை வளமாக்குவதே' என்று கூறிக்கொண்டாலும், இன்று மக்கள் மன்றத்தில், வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றனர். 'கம்யூனிஸ்டா?' என்று, கேட்பது, கேலிக்குரியது என்ற அளவில், அவர்கள்தொண்டு, பாதை நழுவிவிட்டது.

பலாத்காரம், குழப்பநிலை சிருஷ்டிப்பது ஆகியவைகளையே தங்கள் கொள்கையெனக்கூறி, கம்யூனிஸ்டுக் கட்சிபொதுச்செயலாளர் ரணதிவே காட்டிய 'கல்கத்தா வழி' இன்று பலனைத் தரவில்லை—மக்கள் வெறுப்பையும், தோழர்களின் துயரக் கீதத்தையுமே சம்பாதித்துத் தந்திருக்கிறது.

மக்களுக்காகப் பணியாற்றக்கிளம்பும் அரசியல் கட்சிகள், மக்கள் வாழ்வைப் பீதிக் குழியில் புதைப்பதை—அமைதி விரும்பும் எவரும் அனுமதிக்கமாட்டார்கள்.

கம்யூனிஸ்டுத் தோழர்களின் 'கல்கத்தா பாதை' — அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானம்—காட்டுப் பாதையில் அவர்களை அழைத்துச் சென்று, கஷ்ட நஷ்டங்களில் சிக்க வைத்திருக்கிறது.

* * *

'ஆகஸ்டு 15'க்குப் பின், ஆளவந்தார்களான காங்கிரஸ் தலைவர்களின் ஆட்சியில், மக்கள் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கவில்லை. ஆசை, பகற்கனவாயிற்று; அல்லல்கள் பெருகிவிட்டன! ஏழையின் கூக்குரலும், பாட்டாளியின் பரிதாபக் கண்ணீரும், விவசாயிகளின் வேதனையும், வேலையில்லாதோரின் விம்மலும்— தீர்க்கப்படவில்லை. மாறாக வளர்ந்து விட்டன. பஞ்சம், பசி, சாப்பாடு போதவில்லை என்ற கூக்குரல் பன்மடங்கு அதிகமாகிவிட்டது 'ஐயோ' என்ற ஓலமும், 'ஆகாது, இந்த ஆட்சிமுறை' என்ற ஆவேசமும் பரவிக்கிடக்கின்றன—தீயைப்போல்; நாட்டில்! விளைவு, வேலை நிறுத்தங்கள், அதிருப்திக் கூச்சல்கள் ஆத்திரச் செயல்கள்.

மக்கள் மன்றத்தில் பொதுவாக இந்த அதிருப்தி அனல் சுழன்று வீசினாலும், அன்றாடம் பாடுபட்டு கையையும் காலையுமே நம்பி வாழும் 'காத்தான்'களின் வாழ்வில், தொழிலாளர் இதயங்களில் 'எரிமலை' ஏற்பட்டுவிட்டது.

உற்பத்தி ஆலைகளில் உழைத்து உருக்குலையும் தொழிலாளர்களின் மத்தியில் செல்வாக்கு நிரம்பியவர்கள்—இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியினர். 'எரிமலை'மயமாக ஆகிநிற்கும் தொழிலாளர் இதயங்களை வெடிக்கச்செய்து, வேதனை நிலையைச்சிருஷ்டிக்க, ஆட்சியாளரை நடுங்கச்செய்ய —ரணதிவே தந்த திட்டத்தை, கம்யூனிஸ்டுக் கட்சியினர் ஏற்றுக் கொண்டபின், கட்சியின் பாதை மாறியது—தீ வேகமாகப்பரவ ஆரம்பித்து, எரிமலை, சந்தர்ப்பம் நேர்ந்த போதெல்லாம் வெடிக்கத் துவங்கியது—விளைவு, வயலிலே புயல்,வேலை நிறுத்தங்கள், வேதனைச்செயல்கள்!

x x x

இந்திய சுயராஜ்ய கீதத்தை முழக்கி, மக்கள் மன்றத்தின் செல்வாக்கை நிரப்பி, ஏழைமக்களின்
வாழ்வை வளமாக்குவதே எங்க
பணி என்று முழக்கமிட்டுக்கொண்
உருவாகிய காங்கிரஸ், ஆட்சிப்பீட
ஏறியதும் — முதலாளித்துவத்தின்
"எடுபிடி"யாக வேண்டியதாகிவி
டது.

"ஒரு அரசியல் கட்சி, வளர்ந்து
தனது இலட்சியத்தை அடைந்
அதிகார இயந்திரத்தின் அருகி
செல்லும்பொழுது, முதலாளித்து
வம் 'மோகினியாக'மாறி மயக்கும்—
அந்தக்கட்சியில் புகுந்து,இடம்தே
வாழமுனையும். இந்தநிலையைவிட்டு
தப்பவேண்டும். இன்றேல் பொது
ஜன செல்வாக்கின்மீது உருவாகி
அந்தக்கட்சி முதலாளிகளின் 'கை
பொம்மையாகிவிடும்" என்பத
கேற்ப, அரசியல் அதிகாரம் பெற்று
ஆட்சிப்பீடம் அடைந்த காங்கிர
பிர்லாக்களின் பிரசங்க மேடையா
வும், டாடாக்களின் கூடாரமாகவும்
வடபாதிமங்கலங்களின் வாட்ட
தீர்க்கும் சோலையாகவும், வைத்தி
ஞர்களின் வம்புமடமாகவும் ஆ
விட்டது.

ஆளும் கட்சி, முதலாளிகளின்
கைப்பொம்மை.

தொழிலாளிகளோ, குமுறு
எரிமலை.

எனவே, ஆளவந்தார்—குமுறு
எரிமலைகளை அடக்க, அங்கு 'தீ'மூட்
டும் கட்சியினரைச்சிறைக்குள்தள்ளி
முதலாளிகளின் சஞ்சலத்தைத்
துடைக்க, வேண்டியவர்களாயினர்.

பலவேலை நிறுத்தங்கள் நசுக்கப்
பட்டன — ஆலையரசர்கள் முக
களிலே ஆனந்தம்! தொழிலாள
தலைவர்களுக்குத் தடியடி—சிறை—
இது நீடிக்கத் துவங்கியது. விளை
இன்று சிறைகளிலே, ஏராளமான
பாதுகாப்புக்கைதிகள்!

* * *

நேரு, உண்மைப்பொதுவுடைமை
வாதியாகயிருக்கலாம், உறுதியான
சோஷியலிஸ்டாகவுமிருக்கலாம்—
மறுக்கவிரும்பவில்லை! ஆனால் அ
ரது சர்க்கார், முதலாளித்து
மோகினிக்கு அடிமையாகிவிட்ட
என்பதை—எவரும் மறுக்கமுடியாது

ஆட்சிப்பீடம் ஏறியநாள் முதல்
அவரது சர்க்கார் தொழிலாளர்க

சுக்கும் நடவடிக்கைகளை வைத்து
ட்டும் நாம் இதைக் கூறவில்லை.

அவர் பிரதமர்மட்டுமல்ல, வெளி
ட்டுமந்திரியுங்கூட! வெளி நாடு
ளோ—இன்று இரண்டு கூடாரங்
ாக நிற்கின்றன—ரஷ்யா ஒருபக்
ம், அமெரிக்கா இன்னொருபக்கமாக!

இந்த இரண்டு கூடாரங்களில்,
திலும் தாம் சேரப்போவதில்லை,
ந்தியா நடுநிலைமை வகிக்கும் என்று
ந்த இரு கூடாரத்திலும் சேராமல்
னித்து நிற்பதே தங்களது நோக்
் என்று கூறிவருகின்றனர்—தலை
ர்கள். நேருவும், குடியரசுத் தலை
ர் பிரசாத்தும் இதுபோலவே பிர
னப்படுத்தியிருக்கின்றனர். எனி
், அவர்கள் ஆட்சித் தராசு
மெரிக்கா பக்கமே சாய்ந்து வரு
து.

முதலாளித்துவ கூடாரமான
மெரிக்காவிடம் உள்ள தொடர்
், அன்பு நேசமும், ஆசைப்
ருக்கமும், ரஷ்யாவிடம் இவர்க
ல காட்டப்படவில்லை. பிரதமர்
ரு, அமெரிக்கா சென்றபோது,
வரை வரவேற்று எழுதிய பல
த்திரிகைகள் "ஆசியாவில் கம்யூ
சம் பரவாமல் காப்பதற்குள்ள
ம் இந்தியா ஒன்றுதான்" என்று
டவர்த்தனமாக எழுதியிருந்தன.
ட்டில் நிலவும் நெருக்கடிகளைப்
றிப் பேசும்போதெல்லாம் இன்
ய ஆளவந்தார், "பக்கத்து நாடு
ில் கம்யூனிசம், காட்டுத்தீ போல்
விக்கொண்டிருக்கிறது. அந்த
ல இந்தியாவுக்கும் வரவிடலாமா!"
ன்று முழக்கமிடுவதுடன் கம்யூனி
் பரவாமல் தடுக்கவேண்டியது
ாய கடன் என்று பேசிவருகின்
ர்.

பட்டேல் என்று மட்டுமல்ல,
ருவும் பன்முறை இது முக்கிய
ரச்னை" என்பதாகவைத்துப்பேசி
க்கிறார். அவரது, அமெரிக்க
யத்தின்போது, 'கம்யூனிசத்தி
ந்து ஆசியாவைக் காப்பாற்றும்
லன் இவர், என்று அமெரிக்க
சியல் வாதிகள், பாராட்டிப்பேசி
ருக்கின்றனர். 'இல்லை! யார்
ன்னது? என் வேலை அல்ல
!' என்று நேரு, அதற்கெல்லாம்
ப்புக் கொடுக்கவில்லை. அதற்குப்
ல், கம்யூனிசத்தை எதிர்ப்
தையே கடமையாகக் கொண்டிருக்
அந்நாட்டுடன், கொஞ்சிக் குலாவி வருகிறார்—கடன் கேட்கிறார், மூலதனங்களைக்கொண்டுவருக என்று ஓலை விடுக்கிறார்!

ஆனால், அதே வேளையில் 'இங்குள்ள கம்யூனிஸ்டுகள்தான் எங்கட்குப் பிடிக்கவில்லையே தவிர, கம்யூனிசத்தின் மீது பகைமையில்லை!' என்றும் பேசுகிறார், பிரசங்கங்களின் போது!

கம்யூனிசம் வெற்றி பெற்று, சுக வாழ்வு மலர்ந்துகொண்டிருக்கும் ரஷ்யாவுடன்—அரசியல் தொடர்பு இருக்கிறது. அண்மையில் கம்யூனிஸ்டுகளால் கைக்கொள்ளப்பட்ட சீனாவுடனும் — இந்திய சர்க்கார் ராஜீய உறவுகள் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால், அதே நேரத்தில் இங்கு பல மாகாணங்களில் கம்யூனிஸ்டுக் கட்சி சட்ட விரோதமாக்கப்பட்டிருக்கின்றன—இந்தியா முழுமையுமுள்ள கம்யூனிஸ்டுகள் எல்லாம் சிறைக்குள் தள்ளப்பட்டு வருகின்றனர்.

கம்யூனிசம் எங்கட்கு விரோதியல்ல என்று காட்டிக்கொள்வது போல கம்யூனிசம் வெற்றிபெற்ற நாடுகளுடன் தொடர்பு வைத்துக் கொள்ளுகின்றனர். அதே நேரத்தில் கம்யூனிடுக் கட்சி மீது அடக்குமுறை அம்பை வீசிவிட்டு 'அமெரிக்காவை' அண்ணாந்து நோக்குகின்றனர் பெருமிதத்துடன்! முதலாளிகளைப் பார்த்து மோகனப் புன்னகை புரிகின்றனர்!

பொதுவுடைமைப் பூங்காவாக ஆகிவிட்ட நாடுகளுடன், உறவு கொள்கின்றனர். கம்யூனிசப் பாதையை வெறுக்காதவர்கள் போலக் காட்டிக்கொள்கின்றனர்.

உள்நாட்டில் முதலாளிகளின் திருப்தியைச் சம்பாதிக்கும் நோக்கத்துடன், தொழிலாளர் வாழ்வில் சூறாவளியைச் சிருஷ்டிக்கின்றனர். தடியடி, சிறை, துப்பாக்கி—ஆட்சி நடத்துகின்றனர். 'கம்யூனிஸ ஆபத்து நெருங்கிவிட்டது' என்று கதறுகின்றனர். அதே நேரத்தில் 'கம்யூனிசம் பிடித்தமானதுதான் ஆனால் கம்யூனிஸ்டுகள் போக்குத் தான் பிடிக்கவில்லை' என்றும் பேசுகின்றனர்.

இரண்டுங் கெட்டான் நிலையில், 'அர்த்தநாரீசுரர்'களாக, ஆட்சியாளர் போடும் ஆட்டம் நாட்டிலே அமைதியற்ற நிலையைச் சிருஷ்டிக்கிறது—தீயைப் பரவவிடுகிறது.

கம்யூனிசம் வெற்றி பெற்றுவிட்ட நாடுகளின் விரோதத்தைச் சம்பாதிக்கக் கூடாது என்ற ஆசை ஒரு பக்கம். கம்யூனிசம் வளர்ந்தால், முதலாளித்துவம் முறியடிக்கப்பட்டு விடுமே, முற்போக்கு நிலைகள் வளர்ந்துவிடுமே என்ற கவலை ஒரு பக்கம்.

இரண்டுக்குமிடையில் திண்டாடுகின்றனர். இத்திண்டாட்ட நிலைமையைத்தான் பயக்குமேயொழிய, நாட்டு வாழ்வை நல்லதாக்கிவிடாது. நேரு, சிறந்த பொதுவுடைமைவாதி, பெரிய சோஷியலிஸ்டு என்று சொல்லிக் கொண்டு விடுவதால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாது.

சரித்திரம் மாறுகிறது

7-ம் பக்கத்தொடர்ச்சி

முதல் நிகழ்ச்சி 1945ல் பெனாரிஸ் சிறைக்கைதிகள் இருவர் நடத்தப்பட்டது குறித்து, பண்டிதநேரு விடுத்த கண்டனக்கணை! அடுத்த நிகழ்ச்சி பம்பாயில் 1950 ஜனவரி 26—அதாவது குடியரசுத் துவக்க தினத்தின்போது நடைபெற்றது. அடுத்தது 1930-ல் கல்கத்தாவில் நடைபெற்ற துயரசம்பவம்.

அதன்கீழே நாம் தந்திருப்பது, 1950 பிப்ரவரி 6 அன்று பரீலியில் நடைபெற்ற பரிதாபச் செய்தி!

வெள்ளையன் பிடியில் நாடு அல்லோலப்பட்டபொழுது நடைபெற்ற மாதிரி சம்பவங்கள்தான் பெனாரஸ் செய்தியும், கல்கத்தா நிகழ்ச்சியும்!

பெனாரஸ் அதிகாரிகள் போக்குக் கண்டு கொதித்துக் குமுறிய பண்டிதநேரு — பிரதமராகயிருக்கும் ஆட்சியில்தான் 'பம்பாய்' நடந்திருக்கிறது — எம். என். அப்பாஜி என்ற மாணவன் தாக்கப்பட்டு, வாழ்க்கைச் சோலையில் உலவும் பருவத்தில் உயிரிழந்திருக்கிறான்.

பஞ்சாப் படுகொலையைக் கண்டு பரிதாபச் சிந்து பாடி இரத்தக்கண்ணீர் உகுத்த காங்கிரஸ் ராஜ்யத்தில் தான்—துப்பாக்கித் துரைத்தனம்!

இந்த வேதனையை, எந்த வகை 'எழுத்துக்க'ளால் குறிப்பிடுவது—எழுத்துக்களே நடுங்கும் இந்த இரத்தக் களரிகளைக் காண! என்னவென்று சொல்லமுடியும், பாசிசம் தலைவிரித்தாடுகிறது, சரித்திரத்தைத் திருப்புகிறது என்பது தவிர!

சந்திரன் மறைந்தது

ஒரு வீரரின் வாழ்வு முடிந்துவிட்டது, இலட்சியத்துக்காக "எப்படியும்" பாடுபடுவேன் என்று செயலால் காட்டிய சுபாஷ்போஸின் அண்ணன் இறந்துவிட்டார், 'உரிமை, உரிமை' என்று முழக்கமிட்டுவந்த ஒரு குரல் போய்விட்டது, வளர்ந்துவரும் பாசிசத்தை எதிர்த்துப் படை முகாம் அமைத்த ஒரு தளபதி சென்றுவிட்டார், வங்கத்தின் சிங்கம் சரத் சந்திரபோஸ் காலமாகிவிட்டார்!

பொதுவாழ்க்கையில் வெட்டுக்கிளிகளுண்டு, சந்தர்ப்பப் புறாக்களுண்டு, தன்நிலை உயர்வதே பெரிதென நினைக்கும் சுயநலச் சுகவாசிகள் உண்டு! சரத் சந்திரர்-ஒரு மாவீரர், குடும்பத்தோடு, தியாகத் தீயில் குதித்தவர், பதவி பெரிதல்ல, மக்கள் நலன்தான் என் குறிக்கோள் என்று மார்தட்டி வாழ்ந்தவர், வங்கமக்களால் "தங்கம், தங்கம்" எனப்போற்றப்பட்டவர், தன்னலமற்ற தியாகி. இலட்சியவீரர், புத்துலகச் சிற்பி. அவரது பிரிவு, வளர்ந்துவரும் முற்போக்குச் சக்திகளுக்கு, ஒரு பெரிய நஷ்டம்.

காங்கிரசிலே இருந்து கஷ்ட நஷ்டங்கள் அடைந்து, சுதந்தரப்போரின் தழும்புகளை முத்திரையாக்கிக்கொண்ட அவர், இந்திய மந்திரியாக இருந்து 'தம்சேவையை' மக்கள்மன்றத்துக்கு காணிக்கை செலுத்திய சரத் போஸ்—விலகினார், காங்கிரஸ் கட்சி வேதனைப் பாதையில் எடுத்தடி வைத்துவிட்டது என்று முழக்கமிட்டவண்ணம்!

விரும்பியிருந்தால் இன்றும் 'தலைவர்களில்' ஒருவராய், மந்திரியாய், சுகமனுபவித்திருக்கலாம். ஆனால், 'புதுக்கோட்டம் காங்கிரஸ்' என்று சொல்லிக்கொண்டு, மக்கள் வாழ்வை மறந்துவிட்டனர், என்மனச் சாட்சி இடந்தரவில்லை அவர்களோடு ஒட்டிக்கிடக்க என்று பகிரங்கமாக அறிக்கை வெளியிட்டுவிட்டு, வெளியேறினர்.

வேறு கட்சி அமைத்தார், பாசிசம்—முதலாளித்துவம் இரண்டும் ஒழிக்கப்பட வேண்டும் என்று முழக்கமிட்டார், மக்களைத் திரட்டிக்கொண்டிருந்தார் அம்மகத்தான பணிக்கு. வெண்ணெய் எடுக்க முயலும்போது தாழி உடைந்துவிட்டது, கனியைப்பறிக்க எடுத்தடி வைக்கையில் 'கருநாகம்' தீண்டிவிட்டது—சாவு, அவரை. நம்மிடமிருந்து, நாட்டவரிடமிருந்து பிடுங்கிச் சென்றுவிட்டது!

இந்தியா தனது உண்மைத்தலைவர்களில் ஒருவரை இழந்துவிட்டது. இருள் நிரம்பிக் கொண்டிருக்

கும் எதிர்காலம் — இருட்டைப் போக்கும் ஒரு சந்திரனை இழந்துவிட்டது—நாம், நமது இலட்சியத்துக்கு உதவி செய்யும் ஒரு நல்லவரை இழந்துவிட்டோம், நாடு பாசிச எதிர்ப்புத் தளபதிகளில் ஒருவரை இழந்துவிட்டது!

சமதர்மக் கொள்கையுடன் மக்கள் உரிமைக்காகப், போராடிய அம்மாவீரரிடம் பெருமதிப்பு என்றும் நமக்குண்டு. பாசிசம்-பழமை இரண்டையும் எதிர்த்து நிற்கும் பணியில் தனது ஒத்துழைப்பை நல்கும் வெளிமாகாணத்தலைவர்களில் ஒருவர் என்று நம்பிக்கை வைத்திருந்தோம்

திராவிடப் பிரிவினைக்கு திரு... ஆதரவுச் சக்திகளில் அவரையும் ஒ... வராக மனப் பட்டியலில் நாம் வை... திருந்தோம்!

இன்று, அவர் போய்விட்டா... நல்லவர் ஒருவரை இந்நாடு இழந்... விட்டது. நேற்று வரை தூற்றி... திரிந்த, எதிர்த்துப் பேசிய, வி... தித்துக் கிடந்தவர்களின், 'புகழ்... சுமை'யோடு, சந்திரர், சென்றுவி... டார்.!

அவர் வாழ்ந்து காட்டிய வாழ்... —இலட்சியப்பாதை—வளரும் உ... கிற்கு ஒரு அரிச்சுவடி. அவர... இறப்பால் கலங்கிவருந்தும் மு... னேற்றச் சக்திகளின் கண்ணீருட... நாமும் பங்கு கொள்கிறோம். வாழ்... அவர் புகழ்! வளர்க அவர் இல... சியம்!

நமது அனுதாபம்

★

செயல் வன்மையும், திராவிடர்... கப் பற்றுமிக்க திருச்சி கலிபுல்ல... அவர்கள் தமது 61-வது வயதி... 10-2-50 அன்று காலமானார் என்... செய்தி அறியமிகவும் வருந்துகிறோ... புதுக்கோட்டையின் முன்னாள் தி... னாக இருந்து பணியாற்றிய கான்ப... தூர் கலிபுல்லா, தமது வாழ்... கையைப்பொதுச் சேவைக்கென ... படுத்தி, தன்னலியன்ற பணிபுரிந்... பண்பாளர். அவரது மறை... திருச்சி நகர மக்களுக்கும், வர்த்... கர்களுக்கும், ஈடு செய்ய முடியா... நஷ்டமாகும். அவரது பிரிவா... வருந்தும், அவரது குடும்பத்தா... பொதுமக்கள் ஆகியோருக்கு நம... அனுதாபத்தைத் தெரிவித்த... கொள்கிறோம்.

—

சரித்திரம் திரும்புகிறது

கால் கைகளிலே விலங்கு, இருந் னும் மிரட்டினர், 'நட நட' என்று த்தரவு பிறப்பித்தனர்! நீதி மன் மோ ஒருமைல் தொலைவிலிருந்தது. வர்களோ கைதிகள்! அதட்டு தோ, அதிகாரிகள்.

'முடியாதே, காலிலே விலங்கிருக் ம்போது எப்படி நடக்கமுடியும், தாவது ஒரு வண்டி வசதிசெய்து ருங்களேன்' என்று கெஞ்சிக் ரினர். இது மறுக்கப்பட்டது... ழே தள்ளப்பட்டனர், இழுத்துச் ல்லப்பட்டனர், செத்த ஆடுமாடு க்கட்டித்தரைகளில் போட்டிழுத் ச் செல்வதைப் போல...' இத்தக ல் எனக்கு வந்தது என்றால் பமுடியவில்லை, இவ்வளவு மிருகத் னமும் இருக்க முடியுமா என்று னத்தேன்...அவர்கள் அதிகாரி தான் — ஆனாலும் அவர்கள் திதர்கள் தானே! இவ்வளவு கொடுமைக்கு எப்படி, அவர்கள் ந்துணியும், என்று எண்ணி ன்!

ஆனால் இந்த நிகழ்ச்சி பட்டப் லில் நடந்திருக்கிறது, பலர் கண் ல் படுமாறு செய்யப்பட்டிருக்கி , நடைபெற்றிருக்கிறது......

கண்ணீர் சிந்தும் இக்கொடுஞ் யலில், ஈடுபட்ட ஈவிரக்கமற்ற ாலீஸ் அதிகாரிகளை விசாரிக்க ண்டும்—சட்டத்தின் முன் அவர் நிறுத்தவேண்டும்!

X X X

மாணவன் அவன்—மனதில்பட்ட ப்பயப்படாது எடுத்துச் சொல் ம் பருவம். அதோடு மாணவர் கத்தின் நிர்வாகிகளில் ஒருவன். னைப்பிடிக்க ஓடினர் போலிசார் ..பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் று நடந்துகொண்டிருக்கிறது. ர்கள்மீது துப்பாக்கிப்பிரயோகம் பெற்றதால் எங்கும்பீதி, குழப் , பெருங்கூச்சல்! கோரக்காட்சி! டுகலங்கிய மாணவன்ஓடினான்... ..அதிகாரிகளும் ஓடினர், விரட் ர். ஓடிக்கொண்டிருந்த டிராம் ஒன்றில் தாவினான், மறைந்து கொண்டான். இருஇரகசியப்போலி சாரும், அந்த வண்டியின் மீது பாய்ந்து ஏறினர், "நிறுத்துங்கள்" என்று உத்தரவிட்டனர். ஓடிய வண்டி நின்றது. இரு சி. ஐ. டி. களில் ஒருவர் அம்மாணவனின் கழுத்தில் கை கொடுத்தார், "காலரைப்"பிடித்துக்கொண்டார்.

மற்றொரு ஆள் ரிவால்வரை எடுத்து நீட்டிப் பிடித்தார், அவன் மார்புக்கெதிரே! 'இறங்கு கீழே' இல்லாவிட்டால் நீ இரையாவாய்' என்று பயமுறுத்தினர். அவன் 'முடியாது' என்று பிடிவாதம் செய்தான். பிடித்துத் தள்ளினர், உலக வாழ்வையறியாத அந்த மாணவனை வண்டியிலிருந்து கீழே தள்ளினர்! முற்றாத அவ்விளைஞனை முரட்டுக் கரங்கள் வீதியிலே வீழ்த்தின. வீழ்ந்தவனை, பத்துப் பதினைந்து 'வீரர்கள்' தாக்கினராம், தங்கள் தடிகளால்! மூர்ச்சைபோட்டு வீழும் வரை அடித்தனராம்! 'ஐயோ' என்று அவன் அலற, அலற அடித்துக்கொண்டேயிருந்தனராம்......

சிறைக்குள் கொண்டுபோய் தள்ளப்பட்டான் அந்த மாணவன். சின்னாட்களுக்கெல்லாம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டான். பதினைந்து இரவுகளைப்படுக்கையிலேயேகழித்தான்; பரிதாபம் நிரம்பிய நிலையில் அந்த இளைஞனின் இதயத்தைவிட்டு ஆவி போயிற்று! அவன் பிணமானான்— ஆட்சி வரலாற்றில், ஒரு உயிர், அநாவசியமாகப் போயிற்று என்ற ஆத்திரக் குறிப்பு இடம் பெற்றது!

X X X

ஊர்வலமாகச் சென்று கொண்டிருந்தனர், உணர்ச்சியின் வேகத்தால் "ஒழிக இந்த ஆதிபத்தியம்" என்ற முழக்கம், எழுந்து கொண்டிருந்தது. எதிரேமாடியிலிருந்த வண்ணம், கல்லூரி மாணவர்கள் பார்த்துக்கொண்டிருந்தனர்—அமைதியாக, ஆர்வச் சொற்களை மட்டும் ஒலித்துக்கொண்டு செல்லும் அந்த ஊர்வலத்தைத் திடீரெனப் போலீஸ் படை வந்தது, தாக்கிற்று, தடியடி தர்பார் நடத்தியது...... கண்ணாரக் கண்டனர் மாணவர்கள். அவர்கள் இதயமெல்லாம் துடித்தது, இரத்தம் கொதித்தது, 'கோழைகள்! கோழைகள்!!' என்று கோஷமிட்டனர், வெறியாட்டம் ஆடிய அதிகாரிகளை நோக்கி!

ஆத்திரத்துடன் அவர்களை ஏறிட்டுப் பார்த்துவிட்டுப் போலீஸ் படை திரும்பிச்சென்று இரண்டு மணி நேரங்கூட ஆகவில்லை! மாணவர்கள் எல்லாம் தங்கள் இடங்களில் உட்கார்ந்து கொண்டிருந்தனர்—வெள்ளம்போல் போலீசார் புகுந்தனர், அமளி ஆரம்பமாயிற்று! கோழைகள் என்று கோஷமிட்ட இளம் இதயங்களை, அவர்கள் தடிகள் தாக்கின! — 'ஐயோ, அம்மா!' என்ற அலறல்! பரிதாப கீதம், ஒப்பாரி, இது எதுவும் அந்தக் கல்நெஞ்சத்தினரைக் கலக்கவில்லை. அடித்தனர், ஆசை தீரும் வரை! 'வீர'விளையாட்டு நடத்தினர்—'வெதுப்பினோம் வீம்புக்காரர்களை' என்று பெருமிதத்துடன் திரும்பினர்!

X X X

உயர்நிலைப்பள்ளிக்குள் 'குபு,குபு' வென்ச் சிலபோலீசார் நுழைந்தனர், அங்கு நின்றுகொண்டிருந்ததலைமை ஆசிரியர், அவர்கூடயிருந்த இன்னொரு ஆசிரியர் ஆகிய இருவரிடமும் தகராறுசெய்தனர், தாக்கினர். ஆசிரியர்கள் அடிக்கப்படுவதைக் கண்ட மாணவர்கள் ஓடிவந்தனர், கூட்டம் அதிகமாயிற்று, அருகிலிருந்த பொதுமக்களும் வந்துசேர்ந்தனர். அமளியும், கலாட்டாவும் ஏற்பட்டது.

போலீசு வந்தது......சமாளிக்க முடியவில்லை. 'சுடு, சுடு' என்று உத்தரவுகள், இருபத்துஎட்டுமுறை,துப்பாக்கிகள் முழங்கின — இரண்டு பிணங்கள்! 50 பேருக்குக் காயம்!!

X X X

சரித்திரம் திரும்புகிறது—நான்கு நிகழ்ச்சிகளைத் தந்துள்ளோம், இரண்டு பிரிவுகளாக!

(5-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு
ஞாயிறு] 26—2—50 [காஞ்சி

எரிச்சல் கட்சி

✶

அதுதான் சரி!

களிப்புடன் கூறுகிறான், நண்பனின் முதுகைத் தட்டியபடி.

அற்புதமான யோசனை

என்று மீண்டும் கூறுகிறான்; களிப்பு வளர்ந்த நிலையில்.

நண்பன், ஏதோ பேச வாயெடுக்கிறான்—அனுமதி இல்லை.

அவளை அடைய அதுவே சரியான வழி!

என்று மேலும் மகிழ்ச்சியுடன் கூறுகிறான்.

* * *

அவள், செல்வக்குமரி! அவளை அடைய விரும்புகிறான் ஆணழகன்-அவளோ இவனிடம் சிக்குவதாகக் காணோம்.

சிரித்தான்—சிருங்கார ரசமான பாடல்களைப் படித்தான்-கண்சிமிட்டினான் — பெருமூச்செறிந்தான் — அவளோ, ஆடவரின் வழக்கமான "சேட்டை" என்று எண்ணினாள் போலும்-அவனுக்கு இணங்கவில்லை.

ஆழ்ந்த யோசனைக்குப்பிறகு காதலன் ஓர் முடிவுக்கு வந்தான்—அற்புதமான யோசனை—அதுதான்சரி—அவளை அடைய அதுதான் வழி — என்று களிப்புடன் கூவினான், நண்பன் விளக்கம் கேட்டான். காதலன், தன்திட்டத்தையே விளக்கலானான்.

* * *

"செல்வியை நான் அடைந்தாக வேண்டும் — உன் உதவி தேவை அதற்கு"

"என் உதவியா? அவளை நீ அடைய, என் உதவியா?"

"ஆமாம்—உன்னால்தான் ஆகும். கேள் இதனை. செல்வி மாலைவேளையிலே மலர்ச்சோலையிலே, உலவ வருகிறாளல்லவா..........."

"ஆமாம்—ஆமாம்-நீகூடத் தவறு மல் சென்று மனோலயம் பாடுவாயே! தெரியும்."

"அந்த 'லயம்' எதையும் சாதிக்கவில்லை, எனவேதான், புதிய திட்டம் வெற்றித்திட்டம் தயாரித்திருக்கிறேன்"

"சொல்லப்பா திட்டத்தை"

"செல்வியை, நீ, மலர்ப்பொழிலிலே சென்று, பயமுறுத்த வேண்டும்"

"நானு! பயமுறுத்துவதா?

"பாவனைக்கு! கூர்மையான கத்தியைக்காட்டி, 'கூவாதே! கூவினால் குத்திவிடுவேன்—எடு நகைகளை —' என்றுமிரட்டு—அவள் துடி துடிப்பாள், இளகிவிடாதே—நான் அந்தச் சமயம் அங்கு வருவேன்--நம் இருவருக்கும் சண்டை நடக்கும்—பாவனைக்கு—என்னிடம் நீசரணகதியாக வேண்டும்—ஒப்புக்கு-நான் உன்னை மன்னித்துத் துரத்திவிடுவேன்..."

"புரிகிறது, புரிகிறது! என் உயிரைக் காப்பாற்றிய வீராதி வீரரே! உமக்கு நான் என்ன கைம்மாறு செய்யவல்லேன்—இனி நான் உமது அடிமை........"

"என்று செல்வி கூறியபடி என் தோள்மீது சாய்வாள் — அன்புக் காணிக்கையைச் செலுத்துவேன்—வெற்றி பெறுவேன்."

"சினிமா, பார்த்துப் பார்த்துத் தெரிந்துகொண்ட திட்டமோ!"

"இருக்கட்டுமே, தவறு என்ன! நண்பா! எனக்கு இந்த உபகாரம் செய், என்பொருட்டு நீ, இந்தஉதவி செய்யவேண்டும்"

* *

இது திட்டம், பலித்ததா இல்லையா என்று கேட்காதீர்கள்—நண்பன், காதல் வெறியினால் உளறியவனுக்குப் புத்திகூறி 'வேறுவழி தேடு, மங்கையின் மனதைக்கவர, இந்த மன்னர்சாமி முறை வேண்டாம் — சினிமாவிலே பார்க்கும்போதுகூட, இது 'சப்'பென்றுகிவிட்டது' என்று கூறினான்.

X X X

இந்தத்தந்திரத்தை ... கள்' வரிசையிலே தனக்கு இட... இருப்பதாக எண்ணிக்கொண்டுள்ள ஆனந்தவிகடன், அரசியல்அரங்கி... புகுத்த முயற்சிக்கிறது.

X X X

காங்கிரஸ்கட்சி—அதிலும் குறி... பாகச் சென்னை மாகாணக்காங்கிர... மந்திரிசபைக் கட்சியை, தன்ஆத... வையும் தன் சகாக்களான இந்த... மித்திரன், கல்கி,போன்ற இதழ்க... னுடைய ஆதரவையும் நாடித்தீ... வேண்டிய நிலையிலே இருக்கச்செய்... வேண்டுமென்று விகடன் விரும்... கிறது. இரண்டோர் காரியங்களிலே... சென்னைக்காங்கிரஸ் மந்திரி சபை... விகடன் குழுவினருக்கு வெறுப்பூ... டும் போக்கிலே நடந்துகொள்கிறது... காலத்தையும் நேர்மையையு... கவனித்து மந்திரி சபை, இ... விதம் நடந்துகொள்கிறது. விக... னின் விசாரம், கல்கியின் கோபம்... இந்துவின் இடித்துரை, மித்ர... யுக்தி இவைகளை எல்லாம்விட... பொதுமக்களின் மனக் கொதிப்பு... கவனிக்கப்பட வேண்டியதல்லவா—அதனால், காங்கிரஸ் மந்திரி சபை... குறிப்பாக, உத்யோகம், பள்ளி... கூடத்தில் மாணவர்களைச் சேர்ப்பது... என்ற துறையில், வகுப்பு நீதியை... வலியுறுத்தி வருகிறது. தகுதி... திறமை என்ற தந்திரம் பாடி... கொண்டு, 'ஏகபோகபிராசு' செலுத்... தும் அநீதியை அழிக்க, வகுப்பு... வாரி நியமன முறையைச் சென்னை... காங்கிரஸ் மந்திரி சபை, கடை... பிடிக்கிறது—விட மறுக்கிறது... நாம் கெஞ்சினோம் பயன் காணோம்... உபதேசம் உதாசினம் செய்யப்படு... கிறது, மிரட்டுகிறோம், பயப்பட... காணோம், சபித்தால் சிரிக்கிறார்கள்—ஆஹா! — இவ்வளவுக்கு ஆகிவிட்... டதா—என்று விகடன் வெகுண்... டெழுந்திருக்கக் காண்கிறோம்.

காங்கிரஸ் மந்திரி சபையினரும்... பொதுவாகவே, சென்னை மாகாண... திலுள்ள காங்கிரஸ் தலைவர்களி... பெரும்பாலோரும், வகுப்புவாரி... கொள்கை விஷயத்திலே தன்மான... துடன், தைரியமாக நடந்துகொள்... கிறார்கள்—இவர்களை 'எதிர்ப்பவர்... கள்' இல்லை. எனவேதான் இவர்க... இப்படி இருக்கிறார்கள், என்று வி... டன் தீர்மானித்து — ஒரு 'எதிர்...

கட்சி' ஏற்பட்டுவிட்டால், இவர்கள், சிக்கலிலே தள்ளப்பட்டு, துணை, பலம், ஆதரவு தேடுவார்கள், நம்மை நாடுவார்கள்—அப்போது நாம், "ஆத ரவு தருகிறோம், ஆனால் வகுப்புவாரி நியமன முறையை ஒழிப்பதாக வாக்குத் தரவேண்டும்" என்று வற்புறுத்தலாம் — எதிர்க் கட்சியைக் கண்டு கலங்கும் நிலை காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்டுவிடுமானால், நாம் காட்டின இடத்திலே கையொப்பமிட்டு, 'சேவகம்' செய்யும், என்று விகடன் எண்ணுகிறது—விளக்கமறியாக் காதலன், செல்வியை மிரட்டவாளை ஏவி, வீர, தீரனைக் காட்சி தந்து, பிறகு அவளுடைய காதலைப் பெறலாம், என்று எண்ணியது போலவே.

எதிர்க்கட்சி வேண்டும் என்று எழுதுகிறது விகடன்.

ஜெய்இந்த் — வந்தே மாதரம் — பாரத்மாதாக்கி—இவைகளை இன்னமும் 'மனனம்' செய்கிறது, எனினும் எதிர்க்கட்சிவேண்டும், என்று தெளிவாகவும் திட்டமாகவும் மட்டுமல்ல, ஆவலுடனும் தந்திர புத்தியுடனும் தீட்டுகிறது. எதிர்க்கட்சி என்பது ஜனநாயக முறையின் இன்றியமையாத அங்கம், என்ற அரசியல் தெளிவுடன் அல்ல; காங்கிரஸ் கட்சிக்கு ஒரு எதிர்க்கட்சி ஏற்பட்டால் தான், காங்கிரஸ்கட்சி, விகடன் போன்றாரின் ஆதரவைத் தேடித்தீர வேண்டிய நிலையை அடையும், அப்போது மிரட்டலாம், பணியவைக்கலாம், என்ற தந்திர நோக்குடன் தீட்டுகிறது.

காங்கிரஸ் கட்சியின் கொள்கை—வேலைத்திட்டம் — தீவிரமானவை, அவ்வளவு தீவிரம் கூடாது, இங்கு 'பத்தாம்பசலி'த் திட்டம்தான் தேவை, எனவே, அந்த நோக்கத்துக்காக, ஒரு தர்மராஜ்யக் கட்சி—அல்லது வைதீகக்கட்சி, தேவை, என்று வெளிப்படையாகத் தீட்டம், நெஞ்சில் உரம் இருந்தால்.

அல்லது, நாமும் நம்போன்றாரும் ...மாரநம்பி,ஊரறியஉலகறியக்கூறு ...து போல, காங்கிரஸ், முதலாளிகளுக்கும் பிற்போக்கு வாதிகளுக் ...ம் சொந்தமாகி விட்டது, எனவே ...ர நோக்குடையகட்சி வேண்டும் ...று சொல்வதுபோலக் கூறலாம்.

விகடன் இவ்விதம் காரணம் ...ட்டவில்லை, ஒப்புக்கு ஒரு கட்சி—பாவனைக்கு ஒரு கட்சிவேண்டும்—என்ற தன் உள்ளக்கிடக்கையைத் தான் வெளியிடுகிறது.

X X X

"சரியான எதிர்க்கட்சி சட்ட சபையிலே இருந்தால் மந்திரி சபையினர் விவேகத்துடனும், எதிர்க்கட்சியினரின் அபிப்பிராயத்திற்கு உரிய மதிப்புடனும் நடந்து கொள்வார்கள்.

ஆதிக்கக் கட்சியின் அதிகாரம், யதேச்சாதிகாரம் ஆகி விடாமல் தடுக்கவும் எச்சரிக்கை செய்யவும் எதிர்க் கட்சி வேண்டியதுதான்.

எதிர்ப்பே இல்லாத அதிகாரம் யதேச்சாதிகாரமாகி நமது காங்கிரஸ் ஆட்சியைக் கெடுத்து விடக் கூடும்; குடியரசையே குலைத்துக் கொடிய அரசாகவும் மாற்றி விடக் கூடும்."

விகடனின் கருத்துரைகள் இவை. எதிர்க்கட்சி வேண்டும் என்பதற்கு விகடன் காட்டும் காரணங்கள்.

காங்கிரஸ், ஆங்கிலோ—அமெரிக்க மாயவலையில் சிக்கி, இந்தியாவின் எதிர்காலத்தை அடகுவைத்திருக்கிறது. இது குறித்து, விகடன் விசாரப்படவில்லை.

காங்கிரஸ், பாகிஸ்தானுடன் பகை உணர்ச்சி மூட்டக் கூடிய சூழ்நிலையைத் தெரிந்தோ தெரியாமலோ உண்டாக்கி வருகிறது. இதுபற்றி, விகடன் எச்சரிக்கவில்லை.

பெரிய தொழில்களை, தேசிய மயமாக்குவது என்ற திட்டத்தைக் கிழித்தெறிந்து விட்டு முதலாளிமார்களின் முன்பு கட்டியம் கூறுகிறது இன்றைய காங்கிரஸ். இது கண்டு விகடன் வெட்கப்படவில்லை, வருத்தப்படவில்லை.

ஜாலியன்வாலா படுகொலை பற்றிப் பேசி, பாடி, ஓட்டு வாங்கிய காங்கிரஸ் இன்று நாசிக்கில், சேலத்தில், வேறுபல இடங்களிலும் துப்பாக்கியைக் கொண்டு துரைத்தனம் நடத்துகிறது. விகடன், துடிதுடிக்கவில்லை—ஒரு சொட்டுக் கண்ணீரும் விடவில்லை.

அடக்கு முறை அவிழ்த்துவிடப் பட்டிருக்கிறது, விகடன் ஆத்திரப் படவில்லை.

வெளிநாட்டாருக்கு, நம் நாடு, விருந்து மண்டபமாகிறது. இது கண்டு விகடன் வேதனைப்படவில்லை.

பாட்டாளி பதைக்கிறான், பரிகாரம், உபதேசமன்றி வேறொன்று காணோம் — இதுகண்டு, விகடன் விம்முவதில்லை.

இப்படிப்பட்ட பிற்போக்கு, பாசிசப் போக்கிலே செல்லும் காங்கிரஸ் இனிக் கவைக்கு உதவாது, நாட்டுக்கு நல்லாட்சி காண, சமதர்மக் கட்சி தேவை, சமூக அடிப்படையை மாற்றி அமைக்கும் கட்சி தேவை, என்று கூற, விகடனுக்கு விருப்பமில்லை, நோக்கமில்லை. அந்த அடிப்படை மாற்றத்தை நோக்கமாகக் கொண்ட கட்சி அல்ல, அரசியல் சூதாட்டத்தை மட்டுமே கருத்தில் கொண்ட, யார் ஆளுவது, அவரா? இவரா? — என்ற இடம் பிடிக்கும் திட்டம் மட்டுமே கொண்ட ஓர் எதிர்க்கட்சி வேண்டுமாம்! வேண்டும்! வேண்டும்! என்று விகடன் எழுதுவதன் பொருள், கிளம்பும்—கிளம்பும், என்பதுதான்.

"காங்கிரஸ் கட்சியே! வகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறையை விட்டுவிட மறுக்கிறாய்—பார், உன்னை என்னசெய்கிறேன்! 'ஜனநாயக ஜெபம்' சொல்லி, ஒரு எதிர்க்கட்சியை உண்டாக்குகிறேன்"—என்று கூறுகிறது போலும், குறும்பு ஒரு ஆயுதம் என்ற நம்பிக்கை கொண்ட விகடன்.

எதிர்ப்பு என்பது ஒரு ரகம்—எதிர்க்கட்சி என்பது முற்றிலும் வேறானது. இப்போது நாட்டிலே, காங்கிரசுக்கு 'எதிர்ப்பு' செய்யும் கட்சிகள் பல உள்ளன, ஆனால் "எதிர்க்கட்சி" என்று உருவாக ஒன்றும் அமையவில்லை, என்று விகடன், ஜனநாயகம் பாடுகிறது.

எதிர்க்கட்சிக்கு என்னென்ன திட்டங்கள் இருக்கவேண்டும், என்பது பற்றித் துளியும் அக்கரை காட்டாமல், எதிர்க்கட்சி வேண்டும் என்று கூறினால், பொருளும் பயனும் உண்டா—பொறுப்புள்ள பேச்சுத்தான் ஆகுமா?

வகுப்புவாரிக் கோட்பாட்டை வீழ்த்தவேண்டும் என்ற வஞ்சக நோக்கம் தவிர, இதிலே தொக்கிக் கிடக்கும் தந்திரம்தான், என்ன இருக்கிறது.

இந்த உள் எண்ணம் இருக்கிற

காரணத்தால்தான், 'அடிப்படை'யான விஷயங்களிலே, மாறுபாடான கருத்துகொண்ட 'எதிர்ப்புச் சக்திகள்' ஒவ்வொன்றும், விகடனுடைய பார்வைக்கு, மிக மிகச் சாமான்யமானவைகளாகத் தெரிகின்றன. அவைகள் யாவும், குடிஅரசுக் குழந்தைக்கு நேரிடும் நோய்களாம், விகடனாரின் விவரம்—விளக்கம்—வெளிப்படையான நோக்கமற்ற எதிர்க்கட்சி உதயம் தான் உருவான திட்டமாம்! என்ன பேதைமை! பேதைமையை வெளியிடும்போது எவ்வளவு துணிவு!

எதிர்ப்புச் சக்திகள், விகடனின் கருத்துப்படி, கிள்ளுக்கீரையாம்—தொகுதிகளையும் செலவையும் கணக்கெடுத்து ஓட்டுவேட்டைக்கு 'ஜல்லடம்' கட்டும் முறை மட்டுந்தான், ஜனநாயகமாம்!

எதிர்ப்புச் சக்திகள், வரலாற்றை மாற்றக்கூடியவை, மந்திரி சபைகளை மட்டுமல்ல!

எதிர்ப்புச் சக்திகள், பூகோளப் படத்தைத் திருத்தி அமைக்கவல்லவை! உத்யோக எண்ணிக்கையைக் கூட்டவோ குறைக்கவோ மட்டும் வல்லமை கொண்ட எதிர்க்கட்சிகளால் எண்ணிப் பார்க்கவும் முடியாத இலட்சியங்களை உள்ளடக்கியவைகள் தாம், எதிர்ப்புச் சக்திகள்.

இவை, விகடனுக்குப் பிடிக்கவில்லை—உண்மை-விவேகிகள் மட்டுமே, இவைகளைப் புரிந்துகொள்ள முடியும்.

நாடு, விடுதலை பெற்றதும், கிளம்பியுள்ள பிரச்னைகள், நான் மந்திரியாவதா, நீயாவதா, மஞ்சளா, சிகப்பா, பத்தா, எட்டா என்ற பேச்சால், தீர்க்கப்படக் கூடியவை அல்ல. அடிப்படைப் பிரச்னைகள் கிளம்பியுள்ளன. புதியதோர் சமுதாய நீதியைக் கண்டாக வேண்டும்—தாயகத்தைத் தனயர்கள் கண்டு பெற்றுக் களித்திடும் உரிமை கிடைத்தாக வேண்டும்—மிருக நிலையிலே தள்ளப்பட்டிருக்கும் மக்களை, மனிதர்களாக்க வேண்டும்—காடாகிவரும் நாட்டைப் பூங்காவாக்க வேண்டும்—காஸ்மாபாலிடன் கிளப்பினர் மேற்கொள்ளக்கூடிய காரியமல்ல—விகடத்தால் வெற்றி பெற இயலாது—வேதனையை வீழ்த்தி வெளிக் கிளம்பும் புதியதோர் எழுச்சியை நாட்டவர் கொள்ள வேண்டும்—எதிர்ப்புச் சக்திகள், இந்த முனையிலே மும்முரமாகப் பணி புரிகின்றன.

இவைகளைக் கண்டறிய விகடனுக்கு நேரம் இராது—நோக்கமும் கிடையாது — எனவேதான், 'கையாண்டி' மூலம், தன் அறியாமையை மறைத்துக்கொள்ள முற்பட்டிருக்கிறது. எதிர்ப்புச் சக்திகளை ஏளனம் செய்யும் விகடன், நமது கழகத்தையும் தீண்டிப் பார்க்கிறது.

'அகில இந்தியா' என்றதுமே அஞ்சக்கூடிய முன்னேற்றக் கட்சிகளும் கழகங்களும் உண்டு. இத்தகைய கட்சித் தலைவர்களில் ஒருவர், 'சீதோஷ்ண நிலை, நடை உடை பாவனைகள், உணவு பாஷை முதலிய அம்சங்களில் இந்தியா என்ற உபகண்டத்திலே பல வேற்றுமைகள் இருப்பதால், இத்தகைய தேசத்திற்கு ஓரே அரசியல் அமைப்பு ஒருபோதும் கூடாது, கூடவே கூடாது என்று எங்கள் கட்சி கருதுகிறது. தனித் திராவிட நாட்டை அடைய எங்கள் கட்சியுடன் மக்கள் ஒத்துழைக்க வேண்டும். வடநாட்டுச் சாமான்களைப் பகிஷ்கரிக்க வேண்டும்'—என்றெல்லாம் அறைகூவிப் பறை சாற்றுகிறார்.

என்று விகடன் தீட்டுகிறது. அறைகூவிப் பறை சாற்றுகிறாராம், கட்சித் தலைவர்களில் ஒருவர்! கட்சித் தலைவர்களில் ஒருவர்!! பெயரைப் பொறிக்கமாட்டாராம் விகடனார்! விளம்பரம் ஆகிவிடுமல்லவா! செய்யலாமா, அந்தப் பாபகாரியத்தை—[பணம் பெற்று லொழிய!!]

விகடனின் விளம்பரத்தைப் பெற முடியாத அந்தத் துர்ப்பாக்கியம் இருக்கட்டும்: ஒருபுறம் — அந்தத் தலைவர் சொன்னதிலே, எதைத் தவறு என்று கூற முடிந்தது இந்த விகடனால்!

திராவிடநாடு என்பது தனிநாடு.

பூகோளம் காட்டும் பாடம்—சரிதம் சாற்றும் உண்மை—பண்பாட்டு ஆராய்ச்சியாளர்கள் கூறும் உண்மை.

விகடன் மறுக்க முன்வருகிறதா, இந்த உண்மைகளை.

எவ்வளவு காலமாக, 'பாரதவர்ஷத்திலே' 'திராவிடநாடு' இணைக்கப்பட்டிருந்தது?

காளிதாசன் கவி பாடியபோது உண்டா? சாணக்கியன் சாம்ராஜ்யத்தைச் சதுரங்கக் காயாக்கியபோது இருந்ததா? அசோகன், தர்மச்சக்கரம் பொறித்தபோது இருந்ததா? எப்போது முதல், 'இந்தியநாடு' என்ற, ஒரு பெயர், ஒரு நிலை, ஒரு நாடு இருந்தது? கூறமுடியுமா விகடனால்!

அறைகூவிப் பறைசாற்ற வேண்டாம்—சிரமம் அதிகம்—அந்தி நேர மந்திரம் கூறுவது போலவாவது, கொஞ்சம் கூறட்டுமே விகடன்.

இதைவிடக் கேலியாகத்தான் முன்பு, நாம், தமிழ் நாடு தமிழருக்கே என்றபோது, விகடன் தீட்டிற்று, எலி வளை எலிகளுக்கே என்று. இன்று!

இன்று, திராவிட நாடு என்ற பேச்சு, ஏளனமானதாகத் தெரிகிறது, விகடனுக்கு!

விவேகம் பிறக்கும், விகடனுக்கும் இது விஷயத்தில், வெகு விரைவில்.

படம் போடாமலா போகும், மார்வாடியின் நிலையை விளக்கி, குஜராத்தியின் குணத்தைக் குறித்து, தமிழன் தத்தளிப்பைக் குறித்து!

அந்த நம்பிக்கை நமக்கு உண்டு, நாம் எடுத்துரைத்துவரும் கொள்கை பழுதுபடா உள்ளத்தவர் எவரையும் தன் வயப்படுத்தும் வல்லமை உள்ளது.

எதிர்ப்புச் சக்தி, இந்த வெற்றியைத்தான் முக்கியமானதாகக் கருதுகிறது. எனவேதான், விகடன் கோரும் விளையாட்டுக் கலியாணத்துக்கு—நிலாச் சோற்றுக்குச் சம்மதிக்க மறுக்கிறது.

ஒப்புக்கு ஒரு எதிர்க் கட்சியை எழச் செய்து, காங்கிரசுடன் அந்த எதிர்க் கட்சி தேர்தலிலே போட்டியிடும் நிலை பிறந்ததும், எதிர்க்கட்சியை வீழ்த்த; நான் என் ஆதரவைத் தருகிறேன், என் வல்லமையைப் பாரும், நான் கோரும் வரத்தைத் தாரும் என்று காங்கிரசிடம் பேரம் பேசிக்கொண்டு, வகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறையை ஒழித்துக் கட்டலாம் என்பது விகடன்போன்றாரின் நோக்கம்.

நோக்கம், சிறுமதியில் பிறந்தது; அதனை வஞ்சனை தாலாட்டுகிறது; பசப்புப் பாலூட்டுகிறது—அது பிழைக்காது!!

சென்னை மாகாணத்திலே உள்ள

காங்கிரஸ் தலைவர்களில் முக்கியமானவர்கள் மட்டுமல்ல, பெரும்பான்மையானவர்கள், வகுப்பு நீதிக்காக வாதாடுகிறார்கள், போராடுகிறார்கள், என்ற ஒரே காரணத்துக்காக,எதிர்க்கட்சி வேண்டும் என்று விகடன் விரும்புகிறது, இந்தச் சூது புரிந்தும், பொதுமக்கள், விகடனின் உண்மை உள்ளத்தைக் கண்டு கொள்ளாமலிரார்.

எவ்வளவு எரிச்சல் கிளம்புகிறது ஏகபோக மிராசு போகிறதே என்று!

இந்த ஒரு காரணத்துக்காக, எவ்வளவு கேவலமாகக் கண்டனச்சொற்களை மாகாணத் தலைவர்கள்மீது விகடன் வீசுகிறது!! யாரார், காங்கிரசாட்சியின் அடக்குமுறையால் தாக்கப்படுகிறார்களோ, அவர்கள்கூடக் கூறாத வகையும் அளவும் உள்ள, வசைச் சொற்களை அல்லவா, விகடன் மாகாணத் தலைவர்கள்மீது வீசுகிறது.

இந்தத் தலைவர்களுக்கு ரோஷமும் கோபமும் பொத்துக்கொண்டு வந்துவிடும், நாம் நியாயமான காரணம் காட்டி, கண்ணியத்தோடு கண்டிக்கும்போதுகூட! விகடன் விளாசும்போது, வெட்கமாவது பிறக்க வேண்டாமா! பிறக்கக் காணோமே!! குட்டக் குட்டக் குனிந்து கொடுக்கிறார்களே குணாளர்கள்! ஏன்?

X X X

அட்டைகள்
சயநலமிகள்
நிரட்சரக் குட்சிகள்
சர்வாதிகாரிகள்
தாந்தோன்றிகள்

விகடன் விளாசுகிறான் இப்படி—யாரை?—சென்னை மாகாணக் காங்கிரஸ் தலைவர்களை எல்லாம்—மந்திரிகள் விலக்கப்படவில்லை!!

"காங்கிரசின் பெயரைச் சொல்லிக்கொண்டு பதவிகளில் அட்டைகளைப் போல ஒட்டிக்கொண்டு, காங்கிரஸ் ஸ்தாபனத்தையே செல்லரித்து வரும் சுயநலக் கூட்டம்.

ஒரு ஜில்லாவில் பதவி வகிக்கும் காங்கிரஸ்காரர் இஷ்டப்பட்டால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அந்தப் பேர்வழி எவ்வித யோக்யதாம்சமும் இல்லாத நிரட்சரக் குட்சியாக இருந்தாலும், அந்த ஜில்லாவில் அவர் சொன்னதுதான் சட்டம். அவர் போட்டதுதான் திட்டம்.

ஒரு ஜில்லாக் காங்கிரஸ் தலைவருக்கே இவ்வளவு அதிகார சக்தி உண்டென்றால், மாகாணத்தில் பதவி வகிப்பவர்களைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? ஹிட்லர் முசோலினி இவர்களுடைய சர்வாதிகாரத் தன்மையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோமே தவிர, அதைப்பார்த்ததில்லை. அந்தச் சர்வாதிகாரத் தன்மைக்குப் பிரத்யட்ச, உதாரணமாக இந்நாட்டில் மாகாணமந்திரிகளின் நடைமுறையைப்பார்த்தாலே போதும்.

தேசத்தின் லட்சியத்தை, ஜனநாயகத்தின் தத்துவத்தைச் சிதறடித்து வருகிறார்கள்.

இந்தப் புல்லுருவிகளைப்போக்கி காங்கிரசைத் தூய்மைப் படுத்த வேண்டும்."

12-2-50. விகடனைக்காங்கிரசில் உள்ள கண்ணியர்கள் பார்க்க வேண்டும்.

புல்லுருவிகளாம்! கேட்கிறதா காது? உறைக்கிறதா சூடு? சுயநலமிகளாம்!—போதுமா, கசையடி! சர்வாதிகாரிகளாம், காங்கிரசை, நாட்டை,குடிஅரசுத் திட்டத்தையே கெடுக்கும் கும்பலாம்!! வீரம் பொங்கி வழியுமே, தீரர்காள், நாங்கள் ஒருசொல் கூறிவிட்டால்! விளாசுகிறதே விகடன், என்ன செய்கிறீர்கள்? முக்காடிட்டுக்கொண்டீர்களோ!

தியாகம் புரிந்தோம், நாட்டை மீட்டோம், காந்தி காட்டிய பாதையில் நடந்தோம் என்று நீங்கள் கூறிக்கொள்கிறீர்கள் பூரிப்புடன், பெருமையுடன்! வீடுகளிலே சமையற் கூடங்களிலேகூடப் படிக்கிறார்கள் விகடனை, அந்த விகடன் தீட்டுகிறது—நீங்கள், சுயநலமிகள், புல்லுருவிகள், என்று!!

எவ்வளவு துணிவு விகடனுக்கு! எவ்வளவு தடித்த தோலராகிறீர்கள், விகடன் கசையடியின்போது! ஏன்? ஏன்?

இவ்விதம், மாகாணக் காங்கிரஸ் தலைவர்களை மனம்போன போக்கிலே கண்டித்தபிறகுதான்,விகடன் எதிர்க்கட்சி தேவை என்றும் தீட்டியது. எச்சரிக்கைபோலும்!!

எதிர்ப்புச் சக்திகள் இந்தச் சூட்சமத்தை நன்றாக அறிந்திருக்கின்றன — எனவேதான், எரிச்சலால் விகடன் ஒரு தந்திரம் கண்டுபிடிக்கிறது, என்பதைக் காணவும் முடிகிறது.

விகடன், எதிர்க் கட்சியல்ல, எரிச்சல் கட்சியை உண்டாக்க முயலுகிறது. பலிக்காது! உண்மையான எதிர்க்கட்சி வேறோர்புறம் உருவாகிக்கொண்டே வருகிறது — விகடனின் கேலியால் தாக்கித் தகர்க்க முடியாத முறையிலே அமைந்து வருகிறது — ஆனால், மந்திரி சபையிலே மடிப்பிச்சைகேட்க அல்ல,மக்கள் மன்றத்திலே பேசி, நாட்டுக்கு நல்லாட்சி அமைக்க.

—❀—

தமிழ்வளர்ச்சிக் கழகம்

நான்காம் பரிசுத் திட்டம்

—✱—

ஆண்டுதோறும் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கிவருவதை யொட்டி 3-ம் பரிசுத் திட்டத்துக்குரிய பரிசு நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டன. பரிசுகள் கோவையில் நடைபெறவிருக்கும் தமிழ்த் திருவிழாவன்று வழங்கப்பெறும்.4-வது பரிசுத் திட்டத்திற்கு: 1948—49 ஆண்டுகளில் வெளியான எல்லா நூல்களிலும் இரண்டிரண்டு பிரதிகள் கழகத்திற்கு அனுப்புமாறு கோருகிறோம். மார்ச்சு மாதம் 7-ந் தேதிக்குள் காரியதரிசி, தமிழ் வளர்ச்சிக் கழகம், சர்வகலாசாலைக் கட்டிடம், சேப்பாக்கம் சென்னை—5 என்ற மேலுரைக்கு அனுப்பவும்.

மொழிபெயர்ப்பு நூல்கள் சாதாரணமாகப் பரிசுத்திட்டத்தில் இடம் பெறா. ஒருதடவை பரிசுத்திட்டத்தில் சேர்ந்த நூல்கள் மறுபடியும் அதில் சேரா. ஆனால் அவற்றைமாற்றியோ அபிவிருத்தி செய்தோ மறுபதிப்பாக வெளிவந்த நூல்களும் பரிசுக்கு அனுப்பப்பெறாத நூல்களின் மறுபதிப்பு 1948—49-ல் வெளியாயிருந்தால் அவைகளும் பரிசிலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும். தமிழ்நாடு அல்லாத வேறுமாகாணங்களிலும் இலங்கை முதலிய இடங்களிலும் வெளியான தமிழ் நூல்கள் பரிசிலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

ரா. கிருஷ்ணமூர்த்தி,
ம. ப. பெரியசாமித்தூரன்,
காரியதரிசிகள்

மனப்போர்

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலைகளில் அமர்த்துவதின் 'மர்மம்' யாது? குருமார் கூட்டத்தார் தெய்வத்தை எவ்வளவு கேவலமாகநினைக்கிறார்கள் பாருங்கள்! உயர்ந்தபடிப்பு படித்திருந்தால் நீதிபதியாக, வழக்கறிஞராக.........மாறிவிடுகிறார்கள். இல்லாவிட்டால் பள்ளியாசிரியாகிவிடுகிறார்கள். கொஞ்சம் 'மட்டமாக' படிப்பிருந்தால் ஏதாவதொரு பணியில் 'கிளார்க்' ஆகிவிடுவார்கள். அழகும், குரலும் இருந்தால் 'சினிமா' நடிகராகிவிடுகிறார்கள். படிக்கமுடியவில்லை யென்றால் 'காபி ஓட்டல்' வைத்துவிடுகிறார்கள். உடலில் வலுவிருந்தால் மாவு குழப்பியாவது பிழைத்துக்கொள்கிறார்கள். இத்தனைக்கும் தகுதியில்லாத ஒரு 'படுபாடாவதி' தினசரி மணியடிக்கவும், தீபாராதனைத் தட்டுத் தூக்கவும் வருகிறான்...........என்று சமூக புரட்சிக்காரர்கள் சொல்வதில் எவ்வளவு உண்மை இருக்கிறது! இல்லாவிட்டால் முருகன் கோவில் குருக்கள் மகன் பி. ஏ., எல். டி. ஆவானேன்? தங்கவியாபாரி தவிடு விற்கப் போவானேன்? பால் பாயாசம் இருக்க பச்சரிசிக் கஞ்சிக்குத் தவிப்பானேன்?

சுப்பிரமணியத்தின் நாட்களிலே தான் ஒரு பெரிய புரட்சி நடந்து விட்டது. அந்தப் பள்ளிக்கூடத்தில் ஆதித்திராவிடப் பிள்ளைகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று சேரியார் கேட்டார்கள். ஆனால் மற்றவரோ மறுத்து விட்டனர். இந்த மறுப்பிற்கு முக்கியமான காரணம் ஊரிலே உள்ள இரண்டு 'பெரும் புள்ளிகளின்' தூண்டுதல்தான். ஒருவர் குருவப்பர், சுப்பிரமணியத்தின் சொந்தத் தந்தை, மற்றவர் வைதீகப் பிள்ளை, ஊரிலே பெரும்பண்ணை! ஆனால் இதைக்கண்டு சேரியார் நடுங்கிவிடவில்லை. ஏன்? அங்கேயும் ஒரு குறிப்பிடத்தக்க தீரன் இருந்தார்.

வீரன் என்றால் பெயருக்கேற்ற காரியம் செய்யக் கூடியவன் என்று எவரும் சொல்வர். ஊரிலே உள்ள பெரியசாதிக்காரர்களே வீரப்பிள்ளை யென்று வாலொட்டிக் கூப்பிடுவார்கள் என்றால் வீரனின் தீரசெயல்களைப் பற்றி எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ...! அந்த சேரித்தலைவர் தனது பிடியை விடவே இல்லை. அவர்கள் குலப் பிள்ளைகளை அங்கு சேர்த்து, அவர்கள் படித்துத் திரும்புவதை அவரது கண்களால் பார்க்கவேண்டும் என்று துடித்தார்.

வீரனார் அவசரப்படவில்லை, அதற்காக அடங்கியும் விடவில்லை. சாதியென்ற மதுவருந்திய மற்றவரோ ஆத்திரத் திருக்கூத்தாடினர்.

படிப்பு என்பது நல்ல காற்று. அது எவர் மீதும் படும், தொடும்! அதை நிறுத்த முயற்சி செய்கிறார்கள் புத்திசாலிகள்...' ஆற்று வெள்ளத்திற்கு அணை வைக்கோல் துரும்புகள். அறிவுத் தாகத்தை அடக்க ஓடிவரும் இளம் பிள்ளைகளைத் தடுக்க சாதியணை, சாத்திரத் துணை இதற்கு......! 'கலைமகள்' பூசைக்கு வருகிற பக்தர்களைத் தடுக்கிறார்கள், பக்திமான்கள்!

வீரனார் எதிர்ப்பு முன்னணி அமைத்தார். அதற்கு ஏற்ற திட்டமும் போட்டார்!

பத்துப் பிள்ளைகள் மறுநாள் காலை அந்தப் பள்ளிக்குப் போக வேண்டும். அந்தத் தலைமையாசிரியர் மறக்கவேண்டும். அதனைக் கட்சியோடு ஆளவந்திருக்கும் தலைவர்களுக்கு அனுப்பவேண்டும். பிறகு அவர்களின் நேரடியான நடவடிக்கைகளைப் பார்க்கவேண்டும் என்று திட்டமிட்டார். அதற்குப் பிள்ளைகள் வேண்டுமே......! யார் அனுப்புவார்கள்? அவர்கள் அடித்துக் கொன்றாலும் கொன்றுவிடுவார்கள்! அந்த ஊராருக்குள்ள சாதி வெறியின் அளவு தெரியுமே......ஒரு சமயம் கிணற்றில் தவறி விழுந்த குழந்தையை எடுக்கத் துடித்தோடிய முனியனைத் தடுத்துவிட்டார்கள். குழந்தை இறந்தாலும், கிணற்று நீரின் தூய்மைகெடக்கூடாது என்று சொன்னவர்கள் அந்த ஊரார்! நெய் போட்டுச் சாப்பிட்டதற்காக தடிகொண்டு தாக்கியிருக்கிறார்கள். தெருவில் தெரியாமல் நுழைந்த வெளியூர் வெள்ளைசாமியை புளியமிலாறினால் அடித்திருக்கிறார்கள். கோடை வெயிலில் தாகந்தாங்காமல் குளத்தில் நீர் அள்ளிக் குடித்ததற்காக கட்டி வைத்து உதைத்திருக்கிறார்கள். முருகன் கோயிலின் வெளி வாயில்புறத்தில் தவறிப்போய் சென்ற மாட்டை ஓட்டி வந்து மந்தையுடன் சேர்ப்பதற்காக போன மருதப்பனை பிணமாக்கிவிட்டார்களே...! இவ்வளவு துயரக் கதைகளைக் கண்டபிறகும் துணிந்து பிள்ளைகளை அனுப்புவார்களா?

வீரனார் தன் மகன் சேரனையே அழைத்தார், அவனுடன் இன்னுஞ் சிலரையும் சேர்த்து அனுப்பவேண்டுமே! பக்கத்துவீட்டு பரமனின் மகள் பாக்கியத்தையும் அனுப்பக் கேட்டுக்கொண்டார். அவரும் கொஞ்சம் தயக்கத்துடன் ஒத்துக்கொண்டார். ஆறு மைல்களுக்கப்பாலுள்ள 'லேபர்' பள்ளியில படித்தவர்த இன்னும் எட்டுப்பிள்ளைகளையும் சேர்த்தார். ஆக பதின்மர் அறப்போரில் ஈடுபட மறுநாள் காலையில புறப்பட்டுச் சென்றனர்.

ஊரினுள் நுழைந்து சென்றனர். யாருமே தடுத்துச் சொல்லவில்லை. அவர்களை நிறுத்தவும் இல்லை.

பள்ளியின் வாயிலிலே போய் நின்றனர். கடு கடுப்போடு சுப்பிரமணியன் வந்தார்.

"என்ன வேண்டும்......?"

அதிகாரத்தோடு கேட்டார்.

"நாங்கள் இங்கு படிக்கவேண்டும்!"

சேரன் சொன்னான் கணீரென்று! பாக்கியம் அவன் கைகளைப்பற்றியபடி பயந்துகொண்டு நின்றிருந்தாள்.

(தொடரும்)

★

சந்தாதாரர்களுக்கு

"திராவிட நாடு" சந்தாதாரர்கள் சந்தா சம்பந்தமாகக் கடிதம் எழுதும்போது சந்தா எண்ணைக் குறித்தெழுத வேண்டும். சந்தா எண் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா. சந்தா முடியும் தேதி ஒவ்வொரு முகவரிக்கு அடியிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துச் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்

கோட்டைக்குள் 'குத்து வெட்டு'

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மும் ஆத்திரமும் கலந்த இந்த
வார்த்தைகளை அவர்கள் மீது
அள்ளி வீசியிருப்பது—காங்கிரஸ்
கட்சியல்ல, அதன் கைப்பாவை
யான இந்திய தேசீய தொழிற்
சங்கமும் அல்ல, தென்னிந்திய
ரயில்வே தொழிலாளர் மாநாடுநிறை
வேற்றியிருக்கும் நீண்ட தீர்மானத்
தின் சிலபகுதிகள்—நாம் தந்திருப்
பது. ஆமாம்! ஐயமுறவேண்டாம்!!
ந்தத்தொழிற் சங்கத்தில் இவர்கள்
டுபட்டு உழைத்தார்களோ, அதே
சங்கம்இந்தப் 'பரிசுப்பத்திரத்தைப்'
டித்துத் தந்திருக்கிறது — கடந்த
னவரி 28, 29-தேதிகளில் சென்னை
ல் கூடியபொழுது!

"ஜீவானந்தம்" 'ஜீவா' என்று
சொன்னால் கம்யூனிஸ்டுக் கட்சி
ன்பதுதான் நினைவுக்கு வருமே
யாழிய, அவரது உருவம் எவருக்
ம் ஓடிவராது! அவரைப்பற்றியும்
வர்கூட இருந்து அல்லும்பகலும்
டுபட்ட கே. டி. ராஜு, பானு,
ருஷோத்தம், லிங்கப்பன், கிருபா
, மாணிககம், வேலாயுதம், சேது,
ஸ்கரன், வாரியார், மாரி, ராஜா
ணி, ஆண்டி, கிருஷ்ணசாமி, தாமஸ்
சிலாமணி, முதலியோர் குறித்
ம்தான்,

துரோகிகள்

சுயநலமிகள்

கருங்காலிகள்

குண்டர்கள்

றபட்டப்பெயர்கள் அளிக்கப்பட்
ளன, ஆத்திரத்துடன், தென்
ந்திய ரயில்வே சங்கத்தால்.

இச்செய்தியை, இன்றைய "ஜன
தி" இதழாக விளங்குவதும், கம்
னிஸ்டு எண்ணங்களைத் தருவது
ன "போரணி" வார இதழ், ஆத்திர
மான தலைப்புகளிட்டுப் பிரசுரித்
க்கிறது. எம் தலைவர், எங்கள்
என்று பெருமிதத்துடன் எழு
வர்கள் பேனா, துரோகி — சுய
மி, என்ற வார்த்தைகளைப்
றித்திருக்கிறது!

வருடைய பணியால் இக்கட்டு
கும் என்று எக்காளமிட்டதோ
த தொழிற்சங்கம், அவர்களைப்
பி 'நடவடிக்கை' எடுக்கவேண்டு

மெனத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

X X X

தீர்மானம் செய்திருக்கும் தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் மாநாடு கம்யூனிஸ்டுகளைச்சார்ந்தது.

அத்தீர்மானத்தை ஆத்திரத் தலைப்புகளிட்டு, கோட்டை எழுத்தில் பிரசுரித்திருக்கும் இதழும் அவர்களைச் சேர்ந்ததே.

எனவே, தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சியில் பிளவு ஏற்பட்டுவிட்டது—ஜீவாபோன்றவர்கள் கட்சிப் போக்கு பிடிக்காமல் கருத்தை வேறுதிசைக்கு திருப்பிக்கொண்டு விட்டனர், என்ற முடிவு, வெளிப்படுகிறது.

இவர்கள் மீது, இத்தகைய ஆத்திரக்கனலைக் கக்கி, கட்சியிலிருந்து 'சுல்தா' கொடுக்கவேண்டுமென நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானத்துக்குக் காரணம், சிறையில் இவர்கள் ஏனைய கம்யூனிஸ்டுக் கைதிகள் நடத்தும் போராட்டத்தில் பங்கு கொள்ளவில்லை என்பதுதான்.

அதிகாரிகளைக் கட்டுக்கோப்புடன் மிரட்டுவது, உண்ணாவிரதமிருப்பது, உத்வேகம் கொண்டு பேசுவது போன்ற செயல்கள், சிறைகளில் நடைபெறுவதாகச் செய்திகள் வருகின்றன, அல்லவா! அவைகளுக்கு கூறப்படும் பெயர்தான் 'சிறைப் போராட்டம்.' இந்த நடவடிக்கைகளில், இவர்கள் ஈடுபடவில்லை, கட்சிக் கட்டுப்பாட்டை மீறிவிட்டனர் என்பதுதான் இவர்கள்மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு.

சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன் கல்கத்தாவில், இந்தியக் கம்யூனிஸ்டுகள் கூடிய பொழுது, அப்போது பொதுச் செயலாளராகயிருந்த பி. சி. ஜோஷி; கட்சி எப்படி நடத்திச் செல்லப்படவேண்டும் என ஒருதிட்டம் தந்தார். அது, அமைதியான வழிகளில் எப்போதும்போல கட்சி நடவடிக்கைகள் நடைபெற வேண்டும் என்பதாகும்.

கூடாது, இந்தச் சர்க்காரை எதிர்த்து நடவடிக்கைகள் எடுத்தால்தான் நம கட்சி வளர முடியும்—என்று பி. டி. ரணதிவே, ஒரு திட்டம் தந்தார். இது, பலாத்காரப் பாதையில் செல்லவேண்டுமென்பதாகும்.

ரணதிவே திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர் கட்சியின் பொதுச் செயலாளரானார். இந்த 'கல்கத்தா வழி'யின்விளைவாக இன்று கம்யூனிஸ்டுகள்சிறைகளிலேகிடக்கின்றனர்-! கட்சி மீது மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக்கொண்டிருக்கின்றனர்

அதுமுதலே; இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியில் இருபிளவுகள்—கோஷ்டிகள்—இருப்பதாகக் கூறப்பட்டு வந்தது.

அண்மையில் பி. சி. ஜோஷியும் இன்னுஞ் சிலரும் வெளியேறி விட்டனர் என்று செய்திகள் வந்தன.

அதே நேரத்தில், ஜீவானந்தம் கம்யூனிஸ்டுக் கட்சியின் போக்கு பிடிக்கவில்லையென்று கூறுவதாக, சில பத்திரிகைகள் செய்திகளைத் தந்தன.

இப்போது, "போரணி", துரோகி என்ற அடைமொழியுடன், கருங்காலி சுயநலமி, என்று பட்டம் சூட்டி, பதட்டம் நிரம்பிய, கண்டனக் கணைகளை வீசியிருக்கிறது.

இத்தகவல்கள் பற்றி விபரம் எதுவும் நமக்கு வெளிவரவில்லை—மக்களுக்குத் தெரியவும் முடியாது, குற்றஞ் சாட்டப்படும் தோழர்ஜீவானந்தம், சிறைக்குள்ளே கிடப்பதால்.

ஆனால், ஒன்றுமட்டும் நன்றாகத் தெரிகிறது, சிந்தனையில் தென்படுகிறது.

கோட்டைக்குள்ளேயே 'குத்து வெட்டு' ஆரம்பமாகிவிட்டது, பலாத்காரப் பாதைவிரும்பிகள்—விரும்பாதவர்கள் பிளவு அதிகமாகி விட்டது, பல ஆண்டுகள் உழைத்து உளுத்துப்போன ஜீவா போன்றவர்களுக்கே எதிர்ப்புத் தோன்றி விட்டது, இருள் கவ்வுகிறது, என்பதுதான் அது! *

பொன்னுரை!

"காங்கிரஸ்காரர்"கள் தாங்கள் பாடுபடுவதாகக் கூறிக்கொண்டபோதிலும் உண்மையில் ஒரு வேலையும் நடைபெறவில்லை. நம் அவகாசத்தின் பெரும்பகுதி சில்லரைச் சண்டைகளிலும், ஆதிக்க வேட்டையிலுமே வீணாக்கப்படுகிறது—

புது டெல்லி } பிரதமர் நேரு
பிப் 28 }

மனப்போர்

தில்லை வில்லாளன்

சமூக வெறியர்கள் எத்துணை சூதுக்காரர்கள்...எவ்வளவு தந்திரமாகத் தாங்கள் உயர்ந்துவிட்டார்கள் பாருங்கள்! அவர்கள் ஒரு புதிய 'கற்பகதரு'வை வளர்த்துவிட்டார்கள். சமூகம் என்ற நிலத்தில், மூட எண்ணங்கள் என்றஎருக்களையிட்டு, தெய்வ நம்பிக்கை என்ற நீரைப் பாய்ச்சி, பிரிவு என்ற விதையை இட்டு, மதம் என்ற மரத்தை வளர்த்து, சாதியென்ற கிளைகளைப் பரப்பி, வேற்றுமையென்ற இலைகளை நிரப்பி, பாவம் என்ற காய்களை உண்டாக்கி, புண்ணியம் என்ற கனிகளையும் உண்டாக்கித் தங்களுக்கு சுயநலம் என்ற நிழலை உண்டாக்கிக் கொண்டார்கள். அவர்கள் நினைத்ததை யெல்லாம் தருகிறது அந்த மரம்......அந்தோ, அநியாயம், கொடுமை!

சமூக முதல்வர்கள் ஒரு பெரிய தொழிற்சாலை நடத்துகிறார்கள். நமது அறியாமை யென்ற பஞ்சை, புராணம், இதிகாசம் என்ற தடிகளால் அடித்துத் தயாராக்கி, நம்பிக்கை யென்ற நூலாக்கி, அடிமை யென்ற ஆடையாக்கித் தருகிறார்கள். நாம் அட்டியின்றி அணிந்துகொள்கிறோம். அவர்கள் உள்ளுக்குள் சிரிக்கிறார்கள். 'விஷயந் தெரிந்த' நம்மில் சிலர் உள்ளுக்குள் குமுறுகிறார்கள். சிலர் உரத்த குரலில் சொல்லி வருகிறார்கள். அவர்களை நாம் வெறுக்கிறோம். 'விஷமிகள்' என்று தூற்றிவிடுகிறோம்.

ஆம், இல்லாவிட்டால் எட்டுக் கோடி மக்களை இதுவரை ஒதுக்கி வைத்திருப்போமா? தீண்டத் தகாதவர் என்ற தீய வார்த்தைகளால் அவர்களின் உரிமைகளைப் பொசுக்கியிருப்போமா? உழைப்பவர்களை, நமதுவயிறுகளை நிறைக்கும் சற்குணசீலர்களை உதாசீனம் செய்வோமா? காட்டையும் மேட்டையும் திருத்தி, கழனியாக்கி, உழைத்து நீர்பாய்ச்சி, ஊக்கத்தோடு விதையிட்டு, விழிப்போடு களையெடுத்து, திறமையோடு அறுவடை செய்து நெல்மணிகளை குவிப்பவரை நாம் சண்டாளர் என்று சொன்னோம், சொல்கிறோம் ...கொஞ்சமும் நெஞ்சி லிரக்கமில்லாமல்!

நாம் வாடுகிறோம். அந்த 'சமூக சர்க்கார்' வாடா மேனியராய் வாழ்கிறார்கள் என்றால் அவர்கள் புதிய வைத்திய முறையைக் கையாளுகிறார்கள். நமக்கு வழக்கம், பழக்கம் என்ற இரண்டு மருந்துகளை 'இன்செக்ஷன்' செய்து விடுகிறார்கள். அவர்கள் நமது ஏமாளித்தனம் என்ற நீருடன், அவர்களது ஏய்ப்புத் திறமை, 'எத்துவாளி'ப் புலமை யென்ற பொடிகளைக் கலந்த 'டானிக்' சாப்பிடுகிறார்கள்!

அதனால்தான் உலகிலே இல்லாத தீண்டாமைக் கொடுமையைச்சகித்து வருகிறோம். நம்மில் பலர் நடைமுறையில் நடத்தி வருகின்றனர். அந்தக் குலத்திலே பிறந்த பாக்கியம் 'நர்சா'கி விட்டாள். இப்பொழுது தீண்டாதவளல்லள், அவள் தீண்டுதல் இல்லாதவர்கள் எல்லாம் 'எமத்' தீண்டுதலுக்காளாகி விடுகிறார்கள். அவளுடைய தீண்டுதல் கிடைக்காதா என்று ஏங்கிடும் பேர்வழிகள் எத்தனையோ பேர்...!

பாக்கியம் பல சமயங்களில் இந்த சமூகத்தை எண்ணி யெண்ணிச் சிரிப்பாள்...சில நேரங்களில் அழுதும் விடுவாள்!

அவள் பள்ளியிலே படிக்கும் பொழுது வனஜா எவ்வளவு கடுகடுப்பாக நடந்துகொள்வாள்..... 'எடுத்தெறிந்து' பேசுவாள். இடையிடையே சாதியை இடித்திடித்துப் பழிப்பாள். பக்கத்தில் உட்காரவும் அஞ்சுவாள். தொட்டுக் கொள்ளவும் கூசுவாள். ஆனால்...அன்றொரு நாள் நடந்த நிகழ்ச்சி...பாக்கியம் இப்பொழுது நினைத்துக் கொண்டாலும் சமூகத்தின் இந்த 'கேடு கெட்ட' நிலைமையை எண்ணி ஏங்குவாள்.

பாக்கியம் அன்று 'ஆஸ்பத்திரி'யிலிருந்து திரும்பி வந்து உடைகளை மாற்றிவிட்டு, தங்கம்மா கொடுத்த சூடான 'காபி'யையும் அருந்திவிட்டு, 'ஈஸிசேரில்' சாய்ந்திருந்தாள். எதிரிலிருந்த 'ரேடியோ' ஏதோ ஒரு பாட்டை ஒலி பரப்பிக் கொண்டிருந்தது. அவள் பாட்டைக் கேட்கவில்லை. அவளது சிந்தனை எங்கோ ஓடியாடிக் களைப்புத் தெரியாமல் திரிந்துகொண்டிருந்தது.

"சாதி ஏதம்மா, இது வீண் வாதம்மா" என்ற பாட்டை அடுத்தபடி அந்தக் குயில் குரலாள் பாட ஆரம்பித்தாள். பாக்கியம் பாட்டிலே தன் மனதை இழுத்துவந்து ஈடு படுத்தினாள். அந்தப் பாட்டு முடியவில்லை. ஒரு கிழவர் அவசர அவசரமாக உள்ளே வந்தார்.

"வாங்க, வாங்க, அவசரம்....." என்றார் வந்தவர் கொஞ்சமும் தாமதிக்காமல்.

"என்ன......" பாக்கியம் கேட்டாள்.

"என் மகளுக்கு...சுகப்பிரசவம் இருக்காது போலிருக்கு...கொஞ்சம் தயவு செய்யுங்க!"

"சரி..."

பாக்கியம் உடனே கிளம்பி, வந்தவரின் காரிலே சென்றாள், அங்கு போய்ப்பார்த்தால் 'வக்கீல்' வரதராசரின் மகள், அவளது பள்ளித்தோழி வனஜாவேதான்! இவளைக் கண்டதும் கட்டிக்கொண்டு அழுதாள். அவளைத் தேற்றியது மட்டுமல்ல, தங்கச்சிலை மாதிரி ஒரு ஆண் குழந்தையும் 'ஆயுத கேசி'ல்லாமல் பிறக்கவும் செய்தாள்! வனஜா அவளை வாயார வாழ்த்தினாள். பழைய வார்த்தைகளை நினைவூட்டி மன்னிப்பும் கேட்டுக்கொண்டாள்.

பாக்கியம் சிரித்துக் கொண்டாள். சமூகத்தின் மீது பரவியுள்ள தீண்டாமை, ஒருபடைநோய், இதுபோகக் கல்வி யென்ற மருந்திட வேண்டும். பணம் என்ற 'சோப்பை'க்கொண்டு கழுவிட வேண்டும். பதவி என்ற டர்க்கி டவலால்' துடைக்க வேண்டும்!

சமூகம் செய்த சதிக்குப் பலர் தெரியாமலே உடந்தையாக இருக்கிறார்கள். தெரிந்தும் உதவியாக இருக்கிறார்கள். ஒரு சிலர் சதியை எதிர்க்காமலும் இருப்பதில்லை. பெண்கள் பள்ளியின் தலைமையாசிரியை சாரம்மாவின் அன்பான ஆதரவினால் பாக்கியம் எவ்வளவோ பயனடைந்திருக்கிறாள். அந்தத் தலைமையாசிரியை வேறு யாருமல்ல, இப்பொழுதுள்ள டாக்டர்' கருணாகரரின் சொந்த மனைவியேதான். பாக்கியத்திடம் 'டாக்டர்' அன்பாக இருப்பதற்கு அதுவும் ஒரு காரணம்! சாரம்மா, பாக்கியத்தைத்தன் சொந்த மகளைப்போலவே பாவித்து நடத்திவந்தாள். அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் என்று கேட்டார் வள்ளுவர்...சாதியென்ற கதவும், சம்பிரதாயத்தாழ்ப்பாளும் உண்டு என்று சொல்லும் வைதீக வக்கீல்கள்' இன்னமும் இருக்கிறார்கள், மாறாமல்! சாரம்மாவுக்கு அந்தச் சாதிக்கதவு இருக்கும் இடமே தெரியாது. தனது கருணைக் கடப்பாறையினால் இடித்துப் பெயர்த்தெறிந்து விட்டாள் பாலும்! அந்த அம்மாவின் அறிவுரைபடியே 'நர்ஸ்' ஆனாள். அவளுடைய கணவரின் கீழே இன்று வேலையும் செய்கிறாள்.

சாரம்மாவைப் போலவே அவளுக்கு மற்றுமொருவள் துணையாக இருந்தாள் அவளது பள்ளிப் பருவத்தில்......! அவள் பெயர் லில்லி என்பதாகும். அவள் இப்பொழுது அரசியல் பணிமனையில் ஒரு 'டைப்பிஸ்ட்'... இப்பொழுதுதான் பெண்களுக்குப் 'போலீஸ்' வேலை கூட உண்டாமே! நமது 'சர்க்காரு'க்குள்ள புத்தி யாருக்கு வரும்...? 'கண்டக்டர்,' பாதுகாப்பு 'போலீஸ்' ...பெண்களுக்குரிய அரிய வேலைகள்! அது எப்படியோ போகட்டும் லில்லி இன்னமும் பாக்கியத்தை மறந்துவிடவில்லை. மதுரையிலிருந்து அடிக்கடி கடிதம் எழுதுவாள். பாக்கியமும் அவ்வப்பொழுது பதிலிறுப்பாள். அவளுக்கு மன ஆறுதல் தரக் கூடியது லில்லியின் அன்புக்கடிதங்கள் தான்!

அந்தக் கடிதத்தைக் கையில் வாங்கியவுடன் லில்லிதான் எழுதியிருப்பாள் என்று எண்ணினாள். லில்லி எழுதவில்லை அவள் ஆச்சர்யத்தை அள்ளிக் கொட்டுவதைப்போல ஒரு அழகான வாலிபன்—அவளுக்குத் தெரிந்தவன்தான் — எழுதியிருந்தான்...! என்ன எழுதியிருந்தான் ...ஏன் அவள் மகிழ்ச்சியால் கூத்தாடுகிறாள்......?

அறப் போர்

"அன்பு பாக்கியத்திற்கு...ஆசை வாழ்த்துகள் ஆயிரங்கோடி......... தோழன் சேரன் வருகிறான், பண்டைய நாள் தோழியைப் பார்க்க! ஆர்வத்தோடு கூடிய வரவேற்பு இருக்கும் — இருக்கவேண்டும் என்று அவன் எதிர்பார்க்கிறான். பாக்கியமே, கிடைக்குமா?......அன்புள்ள சேரன்."

இதுதான் அந்த சின்னஞ் சிறு கடிதம்.

அவளால் அவளையே நம்பமுடியவில்லை. கண்கள் மீது அவளது மனம் 'நம்பிக்கையில்லாத் தீர்மானம்' கொண்டுவந்து விட்டது! சேரன் எழுதியிருக்கிறான்...... அன்பைத் தெளித்து அனுப்பியிருக்கிறான் மூக்காலனை அஞ்சலட்டையில்! இருக்காதே...அவளால் கொஞ்சமும் நம்பமுடியவில்லையே!

கல்லூர் என்ற எண்ணம் வந்தவுடனேயே அவள் உள்ளத்திலே குதூகலம்......உணர்ச்சிப் புரட்சி! ஊரை வளைத்து ஓடும் சிற்றாறும், அதில துள்ளிக் குதிக்கும் மீன்களும், அவைகளைப் பிடிக்கத் தங்கள் துணிகளை விரித்து ஏமாறும் தோழியரும், தோழர்களும் உடனே வந்துவிட்டார்கள்!

கல்லூர் ஒரு குக்கிராமம்......

ஊரைச் சுற்றி வளமான வயல்கள் உண்டு. அவ்வூர் முருகன் கோவிலுக்கு மும்முறை படையல் உண்டு தினமும்...அதுபோலவே முப்போக சாகுபடி! கிராமத்திலேயே இரண்டு பிரிவு...ஒன்றில் மேல் சாதிக்காரர்கள்—அதிலேயே மிக உயர்ந்தவர்கள் வாழும் அக்கிரகாரம்! மற்றொரு பிரிவு சேரி...... அங்குதான் தாழ்த்தப்பட்ட, உழைப்பால் உயர்ந்த உத்தமர்கள் வாழ்கிறார்கள். ஊர்ப் பிரிவுகளுக்கிடையில ஒரு நல்ல தோப்பு...... மாந்தோப்பு...அதனுள் தான் முருகன், வள்ளி தெய்வயானையுடன் 'கேம்ப்' இருந்தார்!

அந்த ஊரில் ஒருநடுத்தரப்பள்ளி இருந்தது. அது உயர்ந்தோர் வாழும் பகுதியிலிருந்தது. எட்டாம் வகுப்புவரை அங்கு படிக்க வசதியிருந்தது. அந்தப் பள்ளிக்கூடத்து வரலாற்றில் ஒரு புரட்சியே நடந்திருக்கிறது. அதன் தலைமையாசிரியர் சுப்பிரமணியம் என்பவர். அவர்தான் முருகன்கோவில் குருக்களின் அருமைத்திருமகனார். கோவில்களில் பூசை செய்யும் குருமார்களுக்கே அவர்கள் செய்யும் தெய்வீகத் தொழிலில் நம்பிக்கை இல்லைப்போலும்! இல்லாவிட்டால் சாம்பலையும், சிகப்பையும், கொடுத்துவிட்டுகிடைக்கும் பாதி தேங்காயையும், வாழைப் பழத்தையும்,...............கொண்டு தங்கள் பிள்ளைகளை வழக்கறிஞராகவும், பள்ளிவாத்தியாராகவும், வேறு பல வேலைகளுக்கும் அனுப்புவார்களா? ஊர்மக்களுக்காக ஆண்டவனிடம் தூதிருப்பது எவ்வளவு புண்ணிய வேலை......அதைவிடுத்து எப்பாடு பட்டாவது தம் பிள்ளைகளை 'நீச' மொழியைக் கற்கச் செய்து வேறு

(12-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press.
95, Tirukkachinambi Street. Kancheepuram.